
# தென்மொழி

மன்னிய கொள்கை ஏழும்
மலர்கவித் தமிழ்ஞா லத்தே!

மின்னிய தமிழும், சாதி
மதமிலா இனமும், வாய்மை
முன்னிய அரசும், மக்கள்
முரண்படா உடைமைப் பேறும்,




நன்னறு கலையும், பண்பும்,
நல்லறி வியலும் என்றிம்
மன்னிய கொள்கை ஏழும்
மலர்கவித் தமிழ்ஞா லத்தே!

அகவை: 18

ஓலை: 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

www.thamizham.net - Free E book No 7518

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 893 :** ஐயா வணக்கம். மாநாட்டு நிகழ்ச்சிநிரல் கழக அமைப்பு முறை, தென்மொழி வாயிலாக தெரிந்தவுடன் வியப்பும், மனத்தளர்வும் ஏற்பட்டது. குழுக்கள் அமைப்பு முறையை நடைமுறையில் செயல்படுத்த வேண்டுமானால் மக்களிடம் ஆயம்பெற்று ஆட்சி நடத்தும் அரசால் கூட ஒழுங்காகச் செயல்படுத்த முடியாது.

மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் படித்துப் பட்டம் பெற்றவர்கள். அவர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டில் இப்போது உள்ள அரசு தனக்குப் பதவி கொடுக்கவில்லை என்ற குமுறல் மிகுதியால் மாநாட்டில் கலந்து கொள்பவர்களே. பர். பொற்கோ போன்ற தமிழ் மொழிப் பகைவர்கள் கலந்து கொள்வதைப் பார்த்தவுடன் நகைப்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டு அரசு நமக்கு எதிரி. ஆகவே எதிரிக்கு எதிரி நமக்கு நண்பன் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது, ஒரு விடுதலை இயக்கத்துக்கு உடன்பாடானது அன்று. அவர்களுக்கு ஒரு பதவி கிடைத்தால் ஓடி விடுவார்கள்.

தங்கள் இயக்கத்தில் படித்தவர்களுக்குத்தான் முதலிடம் எனத் தெரிகிறது. அதுவும் விடுதலை இயக்கத்திற்கு உகந்ததன்று. படிக்காதவர்கள்தாம் உடல் உழைப்பால் மக்களின் தேவைப் பண்டங்களை உருவாக்கம் செய்கிறார்கள். படித்தவர்களில் பெரும்பாலோர் அரசுப் பணியிலிருந்து தொழிற்சாலைவரை மேற்பார்வையாளராகத்தான் பணிபுரிவார்கள். மேலும் படித்தவர்கள் விடுதலைக்காக இழப்பை (தியாகத்தை)த் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். உழைப்பவர்களிடம் உழைப்பைத் தவிர அவர்களிடம் வேறு ஒன்றும் இல்லை தான். ஆனால், அவர்கள் எந்த இழப்பையும் தாங்கிக் கொள்வார்கள்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக நிறுவப்பட்ட பேராயக்கட்சியில் படித்தவர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்த காலத்தில் அதற்கு எந்த வலிவும் இல்லை. காந்தியார் பேராயக் கட்சியில் சேர்ந்த பின்பு, பொதுவான மக்களையும் எட்டணா உறுப்பினராகச் சேர்த்துப் போராட்டங்களை நடத்திய பொழுதுதான் பெரும்பான்மை மக்களின் சாய்காலைப் பெற முடிந்தது. அதேபோன்று பெரியாரின் கொள்கைகளிலும் கழகத்திலும் கற்றறியாத மக்களும் பங்கு பெற்றதால்தான் பெரியார் அவர்களும் பீடு நடை போட்டார்கள். இன்று தமிழகத்தில் பார்ப்பனர் சங்கம் அமைத்து, ஊர்வலம் வந்து, மாநாடு நடத்தும் துணிவைப் பெற்று விட்டார்கள். அதே போல் ஆர். எசு. எசும், அதன் அமைப்பான விசுவ இந்து பரிசத்தும் தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி கடை விரித்து வருகிறார்கள். '**பெரியார்**' கழகத் தலைவருக்கோ இதெல்லாம் கண்களில் தெரிவதில்லை. தமிழக அரசில் இருப்பவர்களை மட்டும் தெரிகிறது. **தமிழினக்காப்பு** என்ற பேச்சு சரியானதுதான். ஆனால் அவரோ தமிழினத்தில் தனியொருவன் செய்த அல்லது செய்கின்ற தவறுகளை எல்லாம் ஏனைய தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து மறைத்துத் தனிப்பட்டவர்களைக் காக்கும்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7518



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]*





**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

*இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் விறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.*

---


பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், (சிங்கை).
தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக்குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 18] தி. பி. உ௦கங கும்பம் (பெப்-மார்ச்சு'82) [ஓலை 7


# தமிழீழ விடுதலைக் கூட்டணி இனிச் செய்ய வேண்டுவது என்ன?



இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைக் கூட்டணியின் கடந்த கால முயற்சிகள், முழு இறைமை பெற்ற தமிழீழத் தன்னுரிமை நாட்டை மீட்டெடுக்கும் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கான அடிப்படைச் செயல்களாக இருந்துள்ளனவே தவிர, ஒரு முனைப்பு முயற்சியாக இதுவரை அக் கூட்டணி எதையுமே வெளிப்படையாகச் சொன்னதுவோ செய்ததுவோ எதுவுமில்லை. ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குப் படிப்படியாக எத்தனையோ முனைப்பு முயற்சிகள் செய்யப் பெறுதல் வேண்டும். அடிமையுற்றுக் கிடக்கும் மக்களுக்கு

www.thamizham.net - Free E book No 7518

உரிமைக் கனலை ஊட்டுவிப்பது, நடந்துவரும் அரசியல் ஆளுமை நிலையில், அடிமைப் படுத்தப் பெற்ற மக்களைத் தீவிரமாகச் சிந்திக்கச் செய்விக்கும் உரிமை உணர்வுகளை விளக்கமாக உணரச் செய்வது, அவர்களுக்கு நேர்ந்த, நேரவிருக்கின்ற தாழ்ச்சி வீழ்ச்சிகளையும், கொடுமை, கொள்ளை, கொலைப் போக்குகளை வரலாற்று அடிப்படையில் விளங்குவிப்பது—ஆகிய கருத்துப் போராட்டங்களை ஒருவாறு, ஒரு கால கட்டம் வரையில் விடுதலைக் கூட்டணி செய்து கொண்டு வந்தாலும், என்றுமே, எந்த நிலையிலுமே இவற்றையேதாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. எப்பொழுதுமே ஆளும் இனத்தினர் ஆளப்பெறுகின்ற ஓர் அடிமைப் பட்ட இனத்தின் வாழ்வுரிமைகளை, வெறும் கருத்துப் போராட்டங்களின் வழியாகவே, திருப்பித் தந்து விடுவர் என்று நம்புவதோ அல்லது அந்த அடிமைப்பட்ட இனம் எடுத்து வைக்கும் அந்தக் கருத்து நயங்களின் அடிப்படையிலேயே, இழந்துபோன தன் உரிமைகளை மீட்டெடுத்துவிடும் என்பதோ, உலக விடுதலை வரலாற்றில் எங்குமே நிகழ்ந்திராத செய்தியாகும். அதிகாரம் கைவரப்பெற்ற ஆள்கின்ற இனத்தின் இரும்புக் கைகளிலிருந்து, உரிமைகள் பறித்தெடுக்கப் பெற்றதே விடுதலை வரலாறாக இருந்திருக்கின்றதே தவிர, உரிமை இழந்த இனத்தின் திறந்தகைகளில், அல்லது ஏந்திய கைகளில் விடுதலைக் கனி தானாகவே வந்து வீழ்ந்ததென்னும் வியப்பான வரலாறு என்றும் எவ்விடத்தும் நிகழ்ந்ததில்லை. அரத்தம் சிந்தாமல் விடுதலை வரலாறு முற்றுப் பெற்றதே இல்லை. இதனைத் தமிழீழ விடுதலைக் கூட்டணியினர் நன்கு உணர்ந்திருந்தாலும், ஏனோ, தங்கள் ஆளுமை இனத்திடம் கையேந்தியே விடுதலை பெற்று விடலாம் என்று நினைத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

விடுதலை வரலாற்றுப் போராட்டக்காரர்கள் முதலில் கற்க வேண்டிய பாடம் ஒன்று உண்டு. ஒன்றால் வலிந்து இரக்கமற்ற நிலையில் போராடிப் பெறுவது; அன்றால், நல்ல அடிமையாக இருந்து விடுவது. இந்த இரண்டில் ஒன்றுதான் வரலாற்றுக்குப் பொருந்தி வரும் உண்மையாகும். இவ்விலக்கணத்தை உணராமல், விடுதலைக் கூட்டணியினர் செயவர்த்தனே அரசுக்குச் சார்பாக இருந்து கொண்டே விடுதலையின் வெற்றிக் கொடியை நாட்டி விடலாம் என்று காலங் காலமாக எண்ணிக் கொண்டு கிடப்பது முழு அறியாமையாகும்; அல்லது கோழைத்தனமே ஆகும். தமிழீழ விடுதலைக் கூட்டணியின் தலைமையரைப் பொறுத்த அளவில், இன்னும் நமக்கு உரிமை மீட்பு நம்பிக்கை என்பது இழந்துவிட்ட ஒன்றாகத் தெரியவில்லை என்றாலும் எங்கு இழந்துவிடப் போகும் ஒன்றாக இருந்து விடுமோ என்று அஞ்சவே வேண்டியிருக்கின்றது.

தந்தை செல்வாவுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைக் கூட்டணியினரின் விடுதலைப் போராட்ட முயற்சிகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பாய்ப் போன கதையாகவே ஆகிக் கொண்டு வருகிறது. இனி, அதுவுந்தேய்ந்து சிற்றெறும்பாகிப் பின்னர் அதுவுந் தேய்ந்து

www.thamizham.net - Free E book No 7518

எங்கு ஒன்றுமில்லாமற் போய் விடுமோ என்று உண்மையிலேயே அஞ்ச வேண்டியிருக்கிறது; அலமர வேண்டியிருக்கிறது. விடுதலையின் வெற்றி என்பது, தானே பழுத்து விழும் கனி அன்று; அது பறித்தெடுத்துப் பழுக்கவைக்க வேண்டிய பழ வகையைச் சேர்ந்தது. எனவே, 'காலம் வரும் காத்திருங்கள்' என்பது போன்ற உதவாக்கரைச் சோம்பேறியின் கோழைத்தனமான பேச்சுகளுக்கும், அறிவுரைகளுக்கும் ஓர் எல்லை உண்டு. அது பருவம் தேய்ந்து, எழில் மங்கி, உணர்வுகள் ஒடுங்கிப்போன காலத்தில் செய்ய விரும்பிய திருமணமாகப் போய்விடக் கூடாது. காலத்தே முனைந்து முடிக்க வேண்டிய காதல் மணமாகவே கருதப் பெறுதல் வேண்டும். அது கட்டாயக் கடிமணம், அல்லது களவு மணம், அல்லது சிறையெடுத்துச் செய்ய வேண்டிய உடன்போக்கு மணமாக இருந்தாலும் தாழ்வில்லை. முதியவர்களிடமிருந்து முகிழ்த்தெழுந்த விடுதலை உணர்வு எப்பொழுது இளைஞர்களைப்பற்றி நெருப்பாய்க்கனலத்தொடங்குகிறதோ, அதுவே அதன் போராட்டத்திற்குரிய சரியான காலமாகும். காலம் என்பது முதுமையாளருக்கு ஒருவகையானது; இளைஞர்களுக்கு ஒருவகையானது. தொட்டவுடனே துடித்துப் பீறிட்டெழுகின்ற இளைஞர்களுக்குத் தோன்றும் விடுதலை உணர்வைத், தொட்டுத் தேய்த்து மருந்து முயற்சிகளால் மெத்தெனக்கிளம்பும் உணர்வுடைய முதுமைத் தலைவர்கள் காலங்கூறி அவித்து வருவது, உரிமைக்கனியைச் சுவைப்பதற்குரிய பக்குவமும் செவ்வியும் ஆகாது. தீர உணர்ந்தவர்கள் விடுதலை வரலாற்றில் இப்பிழையை என்றும் செய்ய ஒருப்பட மாட்டார்கள்.

தமிழீழ விடுதலைக் கூட்டணித் தலைவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் செய்த அல்லது செய்கின்ற போராட்ட முயற்சிகள் இன்றுவரை எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. வெறும் கருத்துரைகளாலேயே, ஆட்சியாளர் மக்களுக்குள்ள உரிமைகளை வழங்கிவிட முன்வருவார்களானால், உலகில் ஒரு நாட்டில் தோன்றும் விடுதலைக் கருத்துகளே, அனைத்து நாடுகளின் விடுதலை முயற்சிகளுக்கும் போதுமானவையாக ஆகிவிடும். ஆனால் நிலைமை அவ்வாறில்லைவாய் முயற்சியை விடக் கை முயற்சியும் விடுதலை வரலாற்றின் படிநிலை முயற்சியாக வளர்ந்து சிறத்தல் வேண்டும். 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்று திருவள்ளுவரும் செயல் முயற்சியையே பாராட்டிச் சொன்னார். எப்பொழுதும் வழிகாட்டுபவர்கள் செய்ய முனைந்தவர்களுக்கு வழியை அடைத்துக்கொண்டு கிடப்பவர்களாக ஆகிவிடக்கூடாது. செய்யத் தெரிந்தவர்களாக மட்டும் இருந்தால் போதாது. செய்பவர்களாகவும் இருக்க வேண்டும். இனி, செய்ய முனைபவர்கள் சிலகால் செய்யத் தெரியாதவர்களாக இருந்தாலும் தாழ்வில்லை. செய்யத் தொடங்கியபின், செய்யத் தெரிந்தவர்களை விட அவர்கள் தேர்ச்சிபெற்று விட முடியும். எனவே, கூட்டணி ஏற்கனவே செய்த பிழை முயற்சிகளை இன்னும் செய்துகொண்டிராமல் காலங்கருதி இடத்தால் செய்கின்ற அறிவுடைய வினைமுயற்சிகளில்

www.thamizham.net - Free E book No 7518

தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். இளைஞர்களின் கசப்புணர்வை இனியும் மெத்தனமாகக் கருதக் கூடாது. இளைஞர்களின் ஒத்துழைப்பை விட அவர்களின் நம்பிக்கையின்மை நம்மை விரைந்து வலுவிழக்கச் செய்துவிடும். எனவே, அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான செயற்பாடுகளில், தமிழீழ விடுதலைக் கூட்டணியினர். அதன் தலைமையர்,இனி, ஈடுபடுதலை அறிவுடன் விரும்புதல் வேண்டும். வெளிப்படையாக, அங்குள்ள உட்பூசல்களைப் பற்றி, அகப்புற ஆய்வு செய்ய நாம் விரும்பவில்லை. எனவே, பெயர் சுட்டியோ, நிகழ்ச்சி சுட்டியோ நாம் எதனையும் விரிவாகப் பேசுவது தேவையற்றது. ஒன்றை நாம் எல்லோரும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். **உட்பூசல்களைக் காட்டிலும் நம்மை வலிவிழக்கச் செய்யும் அடிமைத்தனம் வேறு இருக்க முடியாது. அதனை வேரறுக்கச் செய்வதில்தான் ஓர் இனத்தின் வெற்றி வரலாறே தொடங்குகிறது.**

ஆகவே, இனியும் சிங்கள அரசின் பூசல் உரைகளிலிருந்தும், ஏமாற்று நடவடிக்கைகளிலிருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ளுதல் வேண்டும். அதனுடன் உள்ள போலி உறவுகளையே அரசியல் தந்தரமாகக் கருதி, நம்மை நாமே கீழறுத்துக் கொள்ளக் கூடாது. நயவஞ்சகமாக ஆட்சியின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு, விடுதலை முழக்கமிடும் வேடிக்கைச் செயலை நாம் வெளிப்படையாக விட்டொழித்தல் வேண்டும். நம் இனத்தை அழித்துக் கொண்டிருக்கின்ற சிங்கள அரசின் அனைத்துத் தொடர்புகளிலிருந்தும் நாம் விடுபட்டாக வேண்டும். **ஒத்துழையாமைக் கொள்கையை** நாம் உடனே மக்களிடம் அறிவித்திட வேண்டும். அதற்கடையாளமாக நம் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் பதவிகளை உடனே உதறி யெறிந்து விட்டு, மக்களோடு மக்களாக வந்து அணிசேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை வெளியறிவிப்பு (பிரகடனம்) செய்தாகல் வேண்டும். ஓராண்டுக் காலத்திற்குள் அரசு நம் உரிமை வழங்கலுக்கு இறங்கி வரவில்லையானால், அடுத்த ஆண்டுப் பொங்கல் நாளில் **வரி கொடாக் கொள்கை**யைக் கடைப்பிடித்தல் வேண்டும். அதுவும் ஓராண்டிற்குள் பயன் படவில்லையாயின், **நேரடிப் போராட்டத்**தில் ஈடுபட்டுத் தமிழினமே ஒட்டு மொத்தமாக விடுதலைப் போர்க்களத்தில் இறங்கிச் சாவா வாழ்வா என்னும் இரண்டில் ஒன்றை முடிவு கட்டியாகல் வேண்டும். இதற்குக் கூட்டணியினர் முன் வருவார்களா? பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு; அது கோழைமையாகக் கருதப்படும் பொழுது, அது தன்னைப் புறங்காட்டிக் கொள்ளத் தவறிவிடக் கூடாதன்றோ?

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. (878)
பேராண்மை என்ப தறுகண்; ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (773)

**—பெருஞ்சித்திரனார்.**

www.thamizham.net - Free E book No 7518

# கழக முதல்வரின் பொறுப்பு அமர்த்தச் சுற்றுச் செலவு

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள், கழக அமைப்புகளில் மாவட்ட, வட்டப் பொறுப்பாளர்களை அமர்த்துதல் தொடர்பாகக் கீழ்க்காணும் விளக்கப்படி சுற்றுச் செலவு மேற்கொள்ளவிருக்கிறார்கள். அவ்வவ் மாவட்டங்களில் உள்ள தென்மொழி அன்பர்களும், கழகத்தில் ஈடுபாடு கொள்ள விரும்பும் தமிழன்பர்களும், ஆர்வலர்களும் ஐயா அவர்களைக் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாள் நேரங்களில் நேரில் வந்துபார்த்துக் கலந்துரையாடலிலும் பொறுப்பமர்த்தத் தேர்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சென்னை-5
10-3-82

**தென்மொழி ப. துரையரசன்**
கழக அமைப்புச் செயலாளர்.

| மாவட்டம் | தங்குமிடம் | நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1. தஞ்சை | சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி | 15-3-82<br>16-3-82 | காலை 10 மணி<br>மாலை 6 வரை |
| 2. தகடூர் | வழிப்போக்கர் விடுதி Traveler's Bangalow தருமபுரி | 23-3-82<br>24-3-82 | ” |
| 3. வடஆர்க்காடு | சோலை விடுதி வேலூர் நகர். | 25-3-82<br>26-3-82 | ” |

பிற மாவட்டங்கள் அமைப்புப் பற்றி அடுத்த அறிவிப்பில் தெரிவிக்கப் பெறும்.

---

## உ.த.மு.க.மாநாட்டின் உயர்ந்த கொடையாளர்கள்

கடந்த உ. த. மு. க. மாநாட்டிற்குத் தனிப்பட்ட முறையில் நன்கொடையளித்த உண்மைத் தமிழ் நெஞ்சங்களில் உரு. 500க்கும் மேல் நன்கொடையளித்த கீழ்வரும் பேரருள் நெஞ்சங்களுக்கு எங்களின் நெஞ்சு நிறைந்த நன்றியும் பாராட்டும் என்றும் உரியவாகும்.

1. நற்றமிழ் அருள்நெஞ்சம் ஒன்று, திருமணிக்குன்றம். உரு. 2000/-
2. தென்மொழி நா. இளமாறன், கோனேரிப்பட்டி. உரு. 1501/-
3. பர். பொ. இளங்கோ, ஈரோடு. உரு. 1100/-
4. திருவாட்டி. விசய நிர்மலா (நடிகை) சென்னை. உரு. 501/-
5. எசு. பழனிச்சாமி, அவநாசி. உரு. 500/-
6. உமைதலைவன், சென்னை. உரு. 500/-
7. சி. சுப்பிரமணியன். அபுதாபி. (U. A. E.) உரு. 500/-

---

www.thamizham.net - Free E book No 7518

# செய்திகள்

## 1. தமிழரசு — இந்திராகாந்தி வாழ்க!

கடந்த கும்பம் ௨ (14- 2- 82.) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி அளவில், சென்னை, ஆவடி கோவில் பதாகையைச் சேர்ந்த இரா. குமாரசாமி, கமலா அவர்களின் மகன் செல்வன் **கு. தமிழரசுக்கும்,** திருப்போரூர் தி. இரா கன்னியப்பன்-சந்திரம்மாள் மகள் செல்வி **இந்திராகாந்திக்கும்,** பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தலைமையில், ஆவடி மீனுட்சித் திருமண மண்டபத்தில் தமிழ்த்திருமணம் நடைபெற்றது. திரு. எசு. ஆர். கண்ணன், வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. இரா. குமாரசாமி தலைவரைப் பாராட்டியுரைத்தார். முன்னாள் சட்ட மன்றத் துணைத்தலைவர் ந. **கணபதி** அறி. இ. ச. இ. தொழிலாளர் நல அதிகாரி, எம். **அரங்சாமி** க. மு; இலக. இ., **இல. முனிவேலு** பொறி. இ. ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். அனைவர்க்கும் நல்விருந்து நல்கப் பெற்றது.

## ௨. உ.த.மு.க. கருத்து விளக்கக் கலந்துரையாடல்.

சென்ற 14- 2- 82 காலை 10 மணியளவில், ஆவடி. மீனுட்சித் திருமண மண்டபப் பார்வையாளர் அறையில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில் உ. த. மு. க. கருத்து விளக்கக் கலந்துரையாடல் கூட்டம் பகல் 1 மணிவரை நடந்தது. கூட்டத்திற்கு ஆவடி, திண்ஊர்தித் தொழிலாளர்கள், அதிகாரிகள், ஆவடி பகுத்தறிவாளர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய வந்திருந்தனர். கழக முதல்வர் பாவலரேறு அவாகள் அன்பர்களிடம் உ. த. மு. க. வின் அமைப்பு பற்றியும் அதன் தேவைகள்பற்றியும், அஃது ஆற்றவிருக்கும் தொண்டுகள் குறித்தும் முன்னுரையாகவும் முடிவுரையாகவும் இரண்டு மணிநேரம் உணர்வும் அறிவும் பொருந்திய உரைகள் நிகழ்த்தினர். அவருடன் சென்றிருந்த கழக முதன்மைக் குழு உறுப்பினர் **தென்மொழி மறை நித்தலின்பனார்** சென்னைப் பெருநகரச் செயலர் **தென்மொழி ஆற்றலரசு,** சைதைவட்டச் செயலர் **தென்மொழி ப. முருகவேள்,** மாணவர் பிரிவுத் தலைவர் **அ. ஆறிறைவன்,** திருவல்லிக்கேணி சேப்பாக்கம் வட்டத் தலைவர் **மா. பூங்குன்றன்,** பெருநகரப் பொருளாளர் **துரை. தென்னவன்** திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் செயலர் **செ. கண்ணன்** ஆகியோரும் கருத்து விளக்கம் தந்தனர். ஆவடிப் பகுதியில் இக் கூட்டம் நல்ல பயன் தந்தது.

## சென்னையில் சொல்லாய்வுத் தொடர் சொற்பொழிவு-௨

சென்னை, எழுமூர் 'தமிழ் சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனம்' ஏற்பாடு செய்துள்ள சொல்லாய்வறிஞர் **தமிழூர் ப. அருளியின்** சொல்லாய்வுத் தொடர்சொற்பொழிவின் 2- ஆம் நிகழ்ச்சி, மேற்படி நிறுவன அரங்கில் வரும் 21-3-82 மாலை 4 மணியளவில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் நடைபெறும். தொகுப்புரை: **பர். சி. பாலசுப்பிரமணியம்.** அனைவரும் வருக.

www.thamizham.net - Free E book No 7518

# உ. த. மு. க. தொடக்க மாநாடு.

## (இரண்டாம் நாள் நிகழ்ச்சி சுருக்கம் — தொடர்ச்சி.)

அப்பாத்துரையார் அவர்கள் மேலும் பேசுகையில், பாவாணர் தொடங்கிய உ. த. க. விற்கும், இக்கால் தொடங்கப் பெறும் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்திற்கும்' உள்ள வேறுபாடு 'இனம்' 'முன்னேற்றம்' என்னும் இரு சொற்களே ஆகும் என்றும், இந்த இரண்டு சொற்களும், இதற்குமுன் உள்ள இயக்கங்களுக்கும், இந்த இயக்கத்திற்கும் உள்ள கொள்கை வேறுபாட்டை நன்கு உணாத்து கின்றன என்றும், உலகில் பல்வேறு இனங்கள் தங்கள் உரிமைகளுக் காக அவ்வப்பொழுது பாடுபடுகின்றன என்றும், அவை போலவே இந்த இயக்கமும் உலகெலாம் பரவி வாழும் தமிழினத்தின் உரிமைக ளுக்காகப் பாடுபடும் என்றும் அரிய கருத்துகள் நிரம்பிய வரலாற் றுரை ஒன்று நிகழ்த்தினர்கள். (முழு உரை பின்னர் விரிவாக வரும்).



படம்-1

அவர்களையடுத்து, 'பெரியார் சம உரிமைக் கழக' அமைப்பாளரும், '**சிந்தனை யாளன்**' இதழாசிரியரும், தீவிர இனநல, பகுத்தறிவுச் சிந்தனையாளருமான ஆகிய **வே. ஆனைமுத்து**, க. இ. அவர்கள் *(படம்-1)* மாநாட்டுத் தொடக்கவுரையாற்றினர்கள். அவர்கள் உரையாற்றுகையில், 'உலகில் பல நாடுகளில் வாழும் தமிழர்களின் எழுதுறை முன்னேற்றங் கருதியே, இவ் வுலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்கப் பெறுகிற தென்றும், இதன் கொள்கைகளில் முதலாவதாக உள்ள மொழி முன்னேற்றம் என்னும் வகையில், தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்றும், அதனை இங்குக் கூடியிருக்கின்ற நூற்றுக்கணக்கான அறிஞர் கள் நன்கு அறிவார்கள் என்றும், அவ்வளவு சிறப்பான மொழி இன்று தாழ்ந்திருக்கின்றதன் கரணியம் என்னவென்றால், அதற் கான முயற்சிகள் இன்னும் நன்றாகச் செய்யப்பட வில்லை என்றும், தமிழர்கள் ஆட்சியில் ஆளுமை பெற்றிருக்கின்ற இன்றுவரையில் பல்வேறு வகையில் தமிழர்களின் வரலாறு நீண்டிருந்தாலும், தமிழ் மொழியில் அறிவியல் முன்னேற்றம் ஏற்படாமல் இருக்கின்ற இந்த நிலையில் நாம் அதன் பெருமைகளை மட்டும் பேசி வருவதில் என்ன சிறப்பு இருக்கிறதென்றும் பலவாறு எழுச்சி நிறைந்த வினாக்கள் பலவற்றைக் கூறித் தொடங்கி அரிய ஓர் ஆய்வுரை நிகழ்த்தினர்கள். *(அவர் ஆற்றிய முழுவுரையும் பின்னர் வெளிவரும்.)*

அவர்களைத் தொடர்ந்து, கடலூர், அரசினர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **முத்து. குணசேகரன்**, க. மு. *(படம்-2)* அவர்கள், 'உலகமளாவிய தமிழின ஒற்றுமை' என்னும் தலைப்பில், உல

www.thamizham.net - Free E book No 7518

கெங்கும் வாழும் தமிழினம் ஆங்காங்குள்ள பல்வேறு அரசியல் ஆளுமை நிலைகளில், பல்வேறு வகையாக அடிமைப் பட்டு, உரிமைகளை இழந்திருக்கின்றது என்றும், அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தமக்குள்ள வேற்றுமைகளைத் தவிர்த்துக் கொண்டு ஓரினமாக நின்று தங்கள் உரிமைக்கும் வாழ்வியல் நலன்களுக்கும் போராட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களைத் தொடர்ந்து, தமிழ்ப் பேரவைச் செம்மலும், ஆட்சிமொழிக் காவலரும் ஆகிய **கீ. இராமலிங்கனார்,** க. மு. அவர்கள் (படம்-3) 'உலகத் தமிழினமும் மொழி வளர்ச்சியும்' என்னுந் தலைப்பில் அரியதோர் அறிவுரை நிகழ்த்தினார்கள். அவர்கள் உரையாற்றுகையில், உலகத் தமிழின



படம்-2

முன்னேற்றக் கழகம் என்னும் தொடரில் உள்ள 'தமிழினம்' என்னும் சொல் தமிழ் மொழி பேசுகிறவர்களையும், அம்மொழி யினங்களாகிய தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலிய திரவிட மொழிகளைப் பேசுகின்றவர்களையும் உள்ளடக்கிக் கூறும் ஒரு சொல் என்றும், அவர்கள் அனைவரின் முன்னேற்றத்தையும் கருதுகிற கழகம் இது வென்றும், சுருக்கமாகச் சொன்னால், இஃது உலக திராவிட முன்னேற்றக் கழகமே என்றும், இன்று தமிழர்கள் உலகில் நாற்பத்தெட்டு நாடுகளில் வாழ்வதாகச் சொல்லப் பெற்றாலும், உலகில்



படம்-3

தமிழர்கள் இல்லாத நாடுகளே கிடையாது என்றும், அவர்கள் எந்தத் திராவிட மொழியைத் தாய் மொழியாகப் பேசி வந்தாலும், அவர்களனைவருமே தமிழின மக்களாகத்தான் தங்களைக் கருதி வாழ்கிறார்கள் என்றும், பல்வேறு நாடுகளில் வாழும் தமிழின மக்களும் தாங்கள் அறிந்தோ அறியாமலோ எந்த வகையிலேனும் ஒரு வகையில் நம் தமிழ்ப் பண்பாடுகளைக் கடைப் பிடிக்கிறார்களென்றும், சயாம் நாட்டில் அரசர்கள் முடிசூட்டிக் கொள்கிற பொழுது அவர்கள் பாடுகின்ற வாழ்த்துப் பாடல்கள், நம்முடைய மங்கல வாழ்த்துப் பாடல்களைப் போலவே இருக்கின்றன என்றும், இப்படி தென்னாப்பிரிக்கா நாட்டில் டர்பனில் வாழும் தமிழ் மக்களும் நம் தமிழ்ப் பண்பாடுகளையே ஒரளவு கடைப்பிடித்து வருகின்றார்கள் என்றும் கூறி, இன்னும் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நம் தமிழ் மக்கள் எவ்வெவ்வாறு தம் அன்றாட வாழ்வில் தமிழ்மொழிச்

www.thamizham.net - Free E book No 7518

சொற்களையும், கலை, பண்பாட்டு மரபுகளையும் தங்களையறியாமலேயே கடைப்பிடித்து வருகின்றார்கள் என்றும் விளக்கங் கூறி, நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி வளர்ச்சியில் தான் நம் தமிழின முன்னேற்றம் அடங்கியிருக்கின்றதென்றும் கூறி முடித்தார்கள்.



படம்-4

அவர்களை யொட்டி, அதே தலைப்பில், புதுவை வழக்குரைஞரும், சொல்லாய்வறிஞரும் ஆகிய **ப. அருளி** வணி. இ; ச. இ. அவர்கள் (படம்-4) தமிழ்மொழியின் கூறுகள் எப்படி உலகின் பல்வேறு மொழிகளிலும் போய்ப் பல்வேறு வடிவாகத் திரிந்தும் திசைந்தும் வழங்குகின்றன என்றும், அவ்வடிப்படை நிலைகளை யெல்லாம் நாம் நன்கு பேணி, தமிழ் மொழி வளர்ச்சிக்கு எவ்வகையில் உதவ முடியும் என்றும், பல்வேறு சொல்லாய்வு எடுத்துக்காட்டுகளைக் கூறி விளக்கவுரையாற்றினார்கள். அவரின் அரிய ஆராய்ச்சி உரை, மாநாட்டிற்கு வந்திருந்த மக்கள் அனைவரையும் பெருவியப்பு அடையச் செய்தது. தமிழீழத் தலைவர்களான அமிர்தலிங்கம் இணையரும் அருளி அவர்களின் சொல்லாய்வுரையை மிகவும் வியந்து பாராட்டினார்கள்.



படம்-5

அவர்களையடுத்து, 'உலக நோக்கில் தமிழ்க் குமுகாய மறுமலர்ச்சி' என்னுந் தலைப்பில், கோவை வழக்கறிஞரும், பெரியார் பெருந்தொண்டருமாகிய அறிஞர். **இரா. கசுத்தூரி** க. இ; ச. இ. (படம்-5) அவர்கள் அரிய தொரு கருத்துரையாற்றினார்கள். தமிழ்க் குமுகாயம் கடந்த ஈராயிரமாண்டுகளாக, எவ்வாறு வரலாற்று நிலைகளில் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது என்றும், அந்நிலைகள் படிப்படியாக எப்படி மாறி வருகின்றன என்றும் அவர்கள் உரையில் விளக்கமாகக் கூறினார்கள்.



படம்-6

அவர்களுக்குப் பின், 'உலகத் தமிழினமும் அரசியல் மேலாண்மையும்' என்னும் தலைப்பில், இலங்கை குடிபெயர்ந்தோர் நல உரிமைச் சங்கத் தலைவரும், முன்னாள் இலங்கை திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளரும், பல்வேறு

www.thamizham.net - Free E book No 7518

நிலைகளில் கடந்த முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளாக, தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தமிழக மக்களிடையில், இலங்கைத் தமிழர்களின் உரிமைக்கும் வாழ்வியல் போராட்டங்களுக்கும் பேராதரவு திரட்டி வரும் அரிய மேடைப் பேச்சாளரும், செயல் வீரருமாகிய **ஏ. ஏ சு. மணவைத்தம்பி** (படம்-6) அவர்கள் பேசினர்கள். அவர்கள் உரையாற்றுகையில், இலங்கை போன்ற நாடுகளில் நந் தமிழினம் எவ்வாறு அரசியல் மேலாளுமையில் சிக்கிச் சீரழிந்து வருகின்றதென்றும், தமிழீழத்தில் நடந்து வரும் தமிழினப் போராட்ட முயற்சிகளும், இழப்புகளும், இன்னல்களும் என்னென்ன என்றும், அவற்றுக்கு இங்குள்ள தமிழ் மக்கள் எவ்வெவ் வகையில் துணை போகவேண்டும் என்றும் உணர்வு கொப்பளிக்கும் வகையிலும், வந்திருந்த தமிழ் மக்களின் உள்ளம் கொதிப்புறும் வகையிலும் சிறந்ததோர் உணர்வுரையாற்றினர்கள்.



படம்-(

அவர்களைத் தொடர்ந்து, அதே தலைப்பில், ஊற்றங்கரை, தமிழ்ச் சங்கச் செயலாளரும், தமிழின உணர்வும் தனித்தமிழ்ப் பற்றும் கொண்ட சீரிய இனநலத் தொண்டரும் ஆகிய **இர.டேவிட்சன் செயச்சந்திரா** க. மு. அவர்கள்(படம்-7),உலக நாடுகளில் உள்ள தமிழின மக்கள்,எவ்வாறு பல்வேறு அரசியல் மேலாண்மைகளில் சிக்கி நலிந்தும் மெலிந்தும் உரிமை இழந்தும் வாழ்ந்து வருகின்றனர் என்பதை விரிவாகவும் விளக்கமாகவும் படம் பிடித்துக் காட்டினர்.

அவரையடுத்து,கோபிச்செட்டிபாளையம் வழக்குரைஞரும், 'குறளியம்' சிறப்பாசிரியரும், பன்னூல் அறிஞரும்,'மாநில சுயாட்சி' என்னும் அரசினர் பரிசுபெற்ற உயரிய வரலாற்றுச் சட்டதுறை ஆய்வுநூலின் ஆசிரியரும், மேம்பட்ட திருக்குறள் சிந்தனையாளருமாகிய **கு. ச. ஆனந்தன்** வணி, இ; ச. இ. அவர்கள்(படம்-8),'பொதுவுடைமைக் கொள்கையும் தமிழின மறுமலர்ச்சியும்' என்னும் தலைப்பில், தமிழினத்தில் திருக்குறள் காலத்திலிருந்து வழிவழியாகப் பேணி வரும் பொதுமை உணர்வுகளையும் பொதுவுடைமைக்கான கூறுகளையும் எடுத்துக் காட்டி,



படம்-8

தமிழின மறுமலர்ச்சிக்குரிய அரிய கருத்துகளை மிக விளக்கமாகக் கூறி அங்குக் கூடியிருந்த மக்களைச் சிந்தனைக் குள்ளாக்கினர்கள்.

www.thamizham.net - Free E book No 7518

620014



படம்-9

அவர்களுக்குப் பின்னர், சென்னை, பகுத்தறிவு ஆசிரியர் அணியின் தலைவரும், தீவிர திராவிடர் கழக முன்னணித் தொண்டர்களில் ஒருவரும், அரிய சொற்பொழிவுத் திறனும், பட்டி மன்றத் தருக்கவாற்றலும், தனித்தமிழ்ப் பற்றும், தென்மொழித் தொண்டில் ஈடுபாடு கொண்டவருமாகிய அ. **இறையன்** க. இ; ப. இ அவர்கள் (படம்-9) முன்னவர் பேசிய அதே தலைப்பில், அறிவுணர்வும் நகைச்சுவையும் மிளிர, சிறந்த பேருரை ஆற்றினார்கள். அவர்கள் பேசுகையில், பார்ப்பனர்கள் எப்படித் திட்டமிட்டுத் தமிழின மறுமலர்ச்சியைத் தடுத்து வருகிறார்கள் என்றும், ஆரிய இதழ்களான 'இந்து' 'துக்ளக்' முதலிய இதழ்கள், அண்ணா சாலை என்று பெயர் மாற்றப் பெற்ற பின்னும், அப்படிக் கூற மனமில்லாமல், எவ்வாறு ஆயினும் 'மவுண்ட் ரோடு' என்றே கூறி வருகின்றன என்றும், மிக அழகுறவும் நகைச்சுவையுடனும் எடுத்துக் கூறி, தமிழர்கள் விழிப்பாக இல்லையானால், தமிழின முன்னேற்றம் அவ்வளவு எளிதில்லை என்று கூறி முடித்தார்கள்.



படம்-10

அவரையடுத்து, 'மன' அறிவு வளர்ச்சியும் கலைகளின் பங்கும்' என்னும் தலைப்பில், தனித்தமிழ் அறிஞரும், நூலாசிரியரும், பாவலருமாகிய புலவர். **தி நா. அறிவுஒளி** க. மு. (படம்-10) அவர்கள் உரையாற்றினார்கள். அவர்கள் பேசுகையில், மன வளத்தையும், அறிவு நலத்தையும் விளைவிக்காத கலைகளால் மக்கட்கு எத்துணையும் பயன் விளையப் போவதில்லை யென்றும், இன்று கலைகளின் ஆளுமை மிகக் கீழ்மை அடைந்துள்ளது என்றும், அந்நிலைகளை மாற்றியமைக்க நாம் பாடுபட வேண்டும் என்றும் கருத்தறிவித்தார்கள். அவரைத் தொடர்ந்து, தஞ்சைத் திருக்குறள் ஆய்வறிஞரும், சிறந்த மெய்யறிவாளரும் ஆகிய குறள்மணி, **சி. அரசிறைவன்** அறி. இ. அவர்கள் (படம்-11), அதே தலைப்பில், உரை



படம்-11

www.thamizham.net - Free E book No 7518



படம்-12

யாற்றுகையில், கலைகள் மக்களின் மனச் சோர்வையும் அறிவுக் களைப்பையும் அகற்றுவதற்கே பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, அவ்வகப்புற நலன்களை அழிப்பதற்காக அன்று என்றும், அவற்றை இக்கால் மாந்தரின் கீழ்மையுணர்வுகளைத் தூண்டிவிடும் வகையில் பயன்படுத்துவது மிகவும வருந்தத் தக்கது என்றும அறிவுறுத்தினார்கள்.

அதன் பின்னர், வெளிநாடுகளிலிருந்து மாநாட்டில் பங்கு கொள்வதற்காக வந்திருந்த பேராளர்களின் கருத்துரைகள் நிகழ்ந்தன. முதற்கண், சிங்கப்பூர் மறைமலையடிகள் நூல் வெளியீட்டக உரிமையாளர்களில் ஒருவரும், நீண்ட நெடுங்காலமாகத் தென்மொழியைப்புரந்து வரும் அன்பர்களில் ஒருவரும், சிங்கை மலேசியத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு விற்பனையாளரும் ஆகிய, **தென்மொழி இறைவாணன்** (படம்-12) அவர்கள், சிங்கை, மலேசிய நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை, அவர்களுக்கிருக்கும் வாழ்வியல் சிக்கல்கள் முதலியவற்றை விளக்கமாகக் கூறி, இக்கால் தொடங்கவிருக்கும் உ. த. மு. க. அங்கெல்லாம் பரவ வேண்டிய இன்றியமையாமையை எடுத்துரைத்தார்.



படம்-13



படம்-14

அவரையடுத்து, அந்தமான் (போர்ட் பிளேயர்) வணிகச் செல்வரும் அந்தமான் தமிழ்ச்சங்கப் புரவலரும் ஆகிய **கு. இளமுருகனார்**, க. மு. (பாலசுப்பிரமணியனார்) (படம்-13) அவர்கள், அந்தமான் தமிழர்களுக்கிருக்கும் அவலநிலைகளையும், அங்குள்ள இனநலப் போராட்ட முயற்சிகளையும், அண்மையில் தமிழ்மொழிக் கல்வி வேண்டி அங்குள்ள இனநலத் தலைவர்கள் செய்கின்ற அருமுயற்சிகளையும், அதன் பொருட்டு அவர்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்ற நிலைகளையும், உ. த. மு. க. அந்த வகையில் செய்ய வேண்டிய பணிகளையும் விரிவாக எடுத்துக் கூறித் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை வேண்டினார். அவரைத் தொடர்ந்து, 'திருப்பம்' இதழாசிரியரும், பாடல் நூல்கள் பலவற்றின்

www.thamizham.net - Free E book No 7518



படம்-15

ஆசிரியரும், ஆகிய மலேசியப் பாவலர் **ஐ. உலகநாதன்** (படம்-14) அவர்கள், உலகெங்கணும் வாழும் தமிழினத்தின் வீழ்ச்சி நிலைகளை இக்கால் தொடங்கும் உ. த. மு. க. மீட்டெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவர்கள் உரைக்குப் பின்னர், 'உலகத் தமிழின நோக்கில் தமிழியற் பண்பாடு' என்னுந் தலைப்பில், மறைமலையடிகளாரின் திருமகனார் திருமுறைச் செல்வர் பேரா. **மறைதிருநாவுக்கரசு** (படம் 15) அவர்கள், உலகில் உள்ள இனங்கள் எல்லாவற்றினும் தமிழினம், விருந்தோம்புதல், ஒப்புரவாண்மை முதலியவற்றுள் தலைசிறந்து விளங்குகிற பான்மையை நன்கு எடுத்து விளக்கினார்.



படம்-16

அவரைத் தொடர்ந்து அதே தலைப்பில நினைவுக்கலையேந்தல், பதின்கவனகர் **திருக்குறள் பெ. இராமையா** (படம்-16) அவர்களும், தமிழியற் பண்பாடுகளை விளக்கி, வேறெந்த இனமும் மாந்தப் பண்பில் தமிழினம்போல் அவ்வளவு சிறந்து விளங்கிட வில்லை என்று விரிவாக எடுத்துக் கூறினார். அவர்களுக்குப்பின், 'தமிழின முன்னேற்றத்தில் அறிவியல் ஈடுபாடு' என்னும் தலைப்பில் **மா. பூங்குன்றன்** அறி. இ; க. மு. (படம்-17) அவர்கள், தமிழினம் அறிவியலுணர்வில் சிறந்து விளங்கவில்லையானால், மாந்த முன்னேற்றத்தில் பின்தங்கிவிட வேண்டியிருக்கும் என்று அறிவியல் சான்றுகளுடன் எடுத்து விளக்கினார். அவரைத் தொடர்ந்து, 'தமிழின முன்னேற்றத்தில் சாதியத்தின் அழிவுகள்' என்னுந்தலைப்பில் நாகைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், நாகையில் தனித்தமிழ் இயக்க மூலவராகிய மறைமலையடிகளாருக்குப் படிமம் நிறுவிய பெருமை சான்றவரும் ஆகிய பாவலர்கோ. **கோவை. இளஞ்சேரன்** (படம்-18) அவர்கள், அரிய கருத்துரையாற்றினார்கள். அவர்கள் தம் உரையில், தமிழின முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகவுள்ள சாதிகளின் கொடுமைத் தன்மைகளை வேரறுக்க வேண்டுவது தமிழர்களின் தலையாய



படம்-17

www.thamizham.net - Free E book No 7518



படம்-18

கடமையென்று குறிப்பிட்டார். அவரை யடுத்து, 'உலகத் தமிழின உரிமை மீட்பு முயற்சிகள்' என்னும் தலைப்பில், தமிழீழ விடுதலைக் கூட்டணியின் கொழும்புச் செயலரும், தமிழின விடுதலை மறவரும், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவரும், கடந்த ஓராண்டுக்கும் மேல், தமிழகத்திலும் வட இந்தியாவிலும் பல்வேறு அறிஞரவைகளிலும். கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தனியார் நிறுவனங்களிலும், தமிழீழப் போராட்டங்கள் பற்றியும், தமிழீழம் தன்னுரிமை நாடாக வேண்டிய இன்றியமையாமை பற்றியும் நூற்றுக் கணக்கில் கருத்துரைப் பொழிவுகளை நிகழ்த்தி வருபவரும் ஆகிய **ஈழவேந்தன்** (படம்-19) அவர்கள் அரிய எழுச்சியுரை ஆற்றினார்கள். அவர்கள் உரையில் இலங்கையில் சிங்களவர்களால் தமிழினத்திற்கு நேர்ந்து வரும் இழிவுகளையும் அழிவுகளையும் மக்கள் மனங்கொள்ளும் அளவுக்கு மிக்க உணர்வுடன் எடுத்துக் கூறினார்கள். அவரைத் தொடர்ந்து அதே தலைப்பில் கோவை மாவட்ட உழவர்கள் கழகத் தலைவர் **என். எசு. பழனிச்சாமி** க.மு. அவர்களும் விளக்கமாகக் கருத்துரையாற்றினார்கள். இறுதி நிகழ்ச்சியாக **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள், உலகத்



படம்-19

தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்கத்தின் தேவை பற்றி மிக விரிவாக எடுத்துக் கூறி, அதன் கொள்கைகளையும் இலச்சினையையும் நன்கு விளக்கி, உணர்வு சான்ற நீண்ட நிறைவுரை ஒன்றை நிகழ்த்தினார்கள். (முழுவுரை பின்னர் வரும்.) அவ்வுரையின் இறுதியில் அவர்கள் இத்தகு சிறந்த ஓர் உலக இயக்கத்தைத் தொடங்கி வைப்பதற்கடையாளமாக, இதன் கொடியினை ஏற்றி வைப்பதற்கு முழுவதும் தகுதியுடையவராகத் தமிழீழ விடுதலைப் போராட்டத் தலைவராகிய நாவலர் **அமிர்தலிங்கத்தையே** தாம் கருதுவதாகக் கூறி, அவரை அக் கழகக் கொடியினை யேற்றிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன் படி **அமிர்தலிங்கனார்** அவர்கள் மேடையின் பின்புறம் நாட்டப் பெற்றிருந்த கொடிக் கம்பத்தில், சுற்றிலும் அரத்தச் சிவப்பும் நடுவில் வெள்ளை வட்டமும் உடைய உ. த. மு. க. கொடியினை ஏற்றி வைத்தார்கள். அக்கால் அன்பர்கள் 'உ. த. மு. க. வாழ்க' என்று மும்முறை முழக்க மிட்டார்கள். அதன் பின்னர் நீண்ட நாளைய உறைத்த தென்மொழி அன்பரும், கொள்கை

www.thamizham.net - Free E book No 7518



படம்-20

மறவரும் ஆகிய **கோட்டை இராவணன்**, க மு. அவர்கள் (படம்-20) கழகத்தின் முப்பத்திரண்டு தீர்மானங்களையும் (மலரில் வெளிவந்துள்ளன.) ஒவ்வொன்றாகப் படித்தார். அவற்றை ஒருமித்த கைதட்டலுடன் பொதுமக்கள் வரவேற்றனர். இறுதியில் இரவு 11-30 மணியளவில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிந்த நிலையில் **அ. வே. மழலைச் செல்வன்** அவர்களின் நன்றியுரையுடனும், இணைந்து பாடிய மாநாட்டுச் செயற்குழுவினரின் தமிழின ஒருமைப் பாடலுடனும், உ. த. மு. க. தொடக்க மாநாடு மிகவும் சீரும் சிறப்பாக இனிது நிறைவுபெற்றது. அந்த நள்ளிரவுக்குப் பின்னரும் வெளியூர் உள்ளூர் அன்பர்களும, அவர்தம் குடும்ப உறுப்பினர்களும் அறிஞர்களும் நிரம்பியிருந்த மாநாட்டு அரங்கம் சிறிதும் கலைவுறாமல் இருந்து, முடிவு நிகழ்ச்சி வரை பங்கேற்றது மிகவும் வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்படுத்துவதாயிருந்தது. இந்நிலை, தமிழர்களுக்கு இன்றைய நிலையில் இக்கழகத் தொடக்கம் எத்துணை இன்றியமையாதது என்பதையே எடுத்துக் காட்டுவதாயிருந்தது என்று சொல்வது மிகையாகாது.

## பாராட்டுரையும் நன்றியுரையும்

1959 ஆம் ஆண்டு **தென்மொழி** தொடங்கியதிலிருந்து, மொழி நிலையில் தனித்தமிழ்க் கொள்கையும், இன நிலையில் தமிழின மேம்பாடும், நாட்டு நிலையில் தமிழ் நில விடுதலை வேட்கையும் ஓர் இயக்கமாகவே வளரத் தொடங்கி, மொழி, இன, நாட்டு உணர்வு இளைஞர்களிடையே பரவலாகக் கால்கொண்டு வேரூன்றியதைக் கடந்த இருபத்து மூன்று ஆண்டுக் காலமாகத் தென்மொழியைத் தொடர்ந்து படித்தும் பரப்பியும் வந்தவர்கள தெளிவாக உணர்வார்கள். சுருக்கமாகச் சொல்வதானால் இக்கால் தனித்தமிழ் உணர்வு கொண்ட அனைத்து அறிஞரும், பேராசியர்களும், புலவர்களும மாணவர்களும் தென்மொழியால வளர்த்தெடுக்கப் பெற்ற மாணவர்களே யாவர் என பதை நன்றியில்லாத ஒருசிலர் தவிர, நன்னெஞ்சம் கொண்ட எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இனி, பாவாணரும் பாவாணர் கருத்துகளும் கூட தென்மொழி இல்லையானால் மேனிலைப் புலமை கொண்ட ஒரு சிலரால் தவிர, தமிழன்பர்கள் எவராலும் உணரப் பெற்றிருக்க முடியாது என்பதை உண்மை நெஞ்சங்கள் அனைத்தும் அறியும். எனவே, இந்த மொழி, இன, நாட்டுஉணர்வில் ஒருங்கிணைந்த தென்மொழி அன்பர்களில், பின்னிரண்டில் வெளிப்படையாக ஈடுபட அஞ்சி, மொழியுணர்வில் மட்டுமே இணையக்கூடிய அன்பர்களைக் கொண்டு தான், பாவாணர் தலைமையிலும், என் செயலாளுமையிலும்

www.thamizham.net - Free E book No 7518

**உலகத்தமிழ்க்கழகம்** தொடங்கப் பெற்றது. இக்கழகமும் **தென்மொழி** யினாலேயே வளர்ந்து பரவியது. தென்மொழியால் வளர்ந்து பரவிய இவ் வியக்கத்தைக் கட்சி அரசியல் சார்புடையதாக ஆக்கவும், உ.த.க. வாலேயே தென்மொழி பரவுகிறது என்பதுபோல் காட்டவும் ஒரு சிலர் தொடங்கிய நிலையில், நான் உ. த க. செயலாளுமை நிலையில் நின்று விலக வேண்டியிருந்தது. தலைமையின் திட்டவட்டமற்ற குறுக்கிட்டுக் கட்டளைகளும் என் விலகலுக்கு ஒரு கரணியமாயிருந்த தென்பதை இக்கால் நான் பெரிது படுத்த வேண்டியதில்லை. இனி, என் விலகலுக்குப் பின்னர் நிகழ்ந்த நிலைகளையும் உ. த. க. வின் தொய்வையும், அது தொடர்பான பல்வேறு நெகிழ்ச்சிகளையும் இங்குக் கூறுவது தேவையற்றதாகும். அதுதேவையெனின் பின்னர் ஒருகால் விரித்துரைக்கலாம்.

இனி, உ. த. க. வின் மொழிநிலைக் கொள்கை யொன்றே நம் முழுநிலைக் கொள்கையாகி விடாது என்பதையும், உ. த. மு. க. தோன்றித்தான் ஆக வேண்டும் என்னும் தேவையிருந்த தென்பதை யும் முன்னரே விளக்கியுள்ளேன். எனவே, உ.த.மு.க. தோற்றத்தைக் கொச்சைப்படுத்த நினைப்பாரின் போலிப் புனைவுரைகளையும், உ. த. க. விலும், பாவாணர் வெளிப்பாட்டிலும், தனித்தமிழியக்கத் தொண்டிலும் தென்மொழியின் அளப்பரிய ஆற்றல் மிக்க ஈடுபாட்டை மறைக்க முற்படுவார்தம் செய்கைகளையும் புல்லியதும், புரைமிக்கதும், எள்ளத் தகுந்ததும், வணிக நோக்கினதுமாகும் என்று கூறி விடுக்க.

எனவே உ. த. மு. க. காலத்தின் கட்டாயமாகத் தோன்ற வேண்டிய ஒரு தேவையாகப் போய் விட்டது. இவ் வலிவான இயக்கம் தொடங்கப் பெற வேண்டும் என்பதை என்பால் அடிக்கடி வலியுறுத்தியவர்கள் சிலர். அவர்களுள் மிகவும் முகாமையானவர்கள் பல்லடம் **மா. ஆறுமுகனார், தென்மொழி ந. முத்துகுமரனார், தென் மொழி, ப. துரையரசனார், தென்மொழி நா இளமாறனார், தென் மொழி ப. முருகவேள், மருத்துவர் கோவிந்தனார், தென்மொழி ச. சின்னத்துரை, தென்மொழி மா. செ. தமிழ்மணி, தென்மொழி சோ. ஆற்றலரசு** முதலியோரேயாவர். இவர்களின் அழுத்தவுரை களும் வலியுறுத்தங்களுமே உ. த. மு. க. வை விரைந்து தொடங்க வைத்தது என்பதை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

இனி, இயக்கம் தொடங்க வேண்டும் என்னும் முனைந்த எண்ணத்தைச் செயல்படுத்தும் நிலையில் ஊக்கமுடன் உழைத்த அன்பர்களைப் பட்டியலிடுதல் இயலாதெனினும், திருச்சி, **தென்மொழி ஈகவரசனும்**, பொருளாளர் **கு. இளங்கோவும், தென்மொழி சோ. ஆற்றலரசும்** என்றும் மறவாமல் என் நெஞ்சில் நிலைப்பவராவர்.

மாநாட்டு வெற்றிக்கு அகநிலையிலிருந்து உழைத்த அன்பர் களைப் போலவே, நனகொடை அறிக்கை வெளியானவுடன் ஆங் காங்கு ஒவ்வொரு நாளும், மிக முயன்று, தெருவில் இறங்கி, உள்ள

www.thamizham.net - Free E book No 7518

முனைப்பொடும் தளராத ஊக்கத்தோடும் நன்கொடை தண்டியனுப்பிய அனைவர்க்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வகையில் மிகுதியான பேர்களைச் சந்தித்து நன்கொடை தண்டுவதில் பேரூக்கம் காட்டிய சென்னை திரு. **அ. வே. மழலைச் செல்வன்** அவர்களும், நெல்லை, திருக்குறுங்குடி திரு. **சங்க தமிழ்ச் செல்வன்** அவர்களும், **தென்மொழி ந. முத்துக்குமரனார்** அவர்களும் மிகவும் பாராட்டுக்குரியராவர். பலர் பலவாறு நன்கொடை தண்டியுள்ளனர். சிலர் ஓரிருவரை மட்டும் சந்தித்து நன்கொடை தண்டியுள்ளனர். சிலர் ஒரு சிலரிடம் மட்டுமே அணுகியுள்ளனர். அன்பர் சிலர் பலரிடம் பணம் தண்டல் செய்து தாம் மட்டும் ஒரு சிறு தொகையும் தராமல் இருந்துள்ளனர். ஒரு சிலர் ஒரே ஒருவரிடம் மட்டும் பணம் தண்டியனுப்பி யிருக்கின்றனர். ஓர் அன்பர் தமக்கனுப்பிய ஒரு பற்றுமுறிச் சுவடியில் உள்ள இருபது பற்றுச் சீட்டு ஒவ்வொன்றிலும் இருபத்தைந்து காசு மேனி, சுவடி முழுவதற்குமாக மொத்தம் ஐந்து உருபாவைத் தம் ஒருவர் பெயரிலேயே அனுப்பியுள்ளார். இவர்கள் அனைவருமே வேறுபாடின்றி நம் முழுநன்றியுணர்வுக்கும் உரியவர்களே எனினும், இவர்களும் மற்றவர்களைப் போல் முனைந்து, இப் பொதுத் தொண்டிற்குத் துணை நின்றிருந்தால், நம் நிலையில் இன்னும் எத்துணை விளைவுகளை, மாநாட்டிற்குப் பின்னுல், எளிதில் உருவாக்க உதவியிருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

இனி, சென்னை நகரில் தண்டல் நடந்த அனைத்து நாட்களிலும் தவறாமல் வந்திருந்த மாநாட்டுச் செயற்குழு அன்பர் பலர்க்கும் நம் நன்றியும் பாராட்டும் என்றும் உண்டு. இசை நிகழ்ச்சி சிறப்புற உதவிய திரு. **அருட்கையன்** (கருணாகரன்) அவர்கட்கும், நடிப்புரை நிகழ்ச்சியில பங்கு கொண்ட செல்வச் சிறுமியர், சிறுவற்கும் நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக. மாநாட்டில் கருத்துரையட்டைகளையும் ஓவியங்களையும் வரைந்துதவிய ஓவிய அறிஞர் திரு. **வி. சின்னையா** அவர்களுக்கும் அவர்களின் திருமகனார்க்கும், ஓவிய வல்லுநர் திரு. **சாவி. தம்பிராசு** அவர்களுக்கும் நம் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றோம். மாநாடு நடந்த இரண்டு நாட்களிலும் நூற்றுக்கணக்கான தென்மொழி உள்ளங்கள் ஓடியாடி உழைத்தன. தனித்தனியே பெயர் சுட்ட இயலாத அவர்களுக்கும், மாநாட்டு • ணவு விற்பனையில் ஈடுபட்ட திருவாளர்கள் **செ. வ. புகழேந்தி** அறி. இ; **அரங்க-தமிழ்மணி, கி. தங்வேலு** ஆகியோர்க்கும், பொத்தகக் கடையில் பணியாற்றிய திருவாளர்கள், தென்மொழி அமைச்சர் **அழ. இளமுருகன்** அறி. இ., **அ. ஆறிறைவன்** அறி. மு., **தமிழ் வேந்தன் எழில், பொழிலன்** க. இ., **பொய்யாமொழி, மொழிக்கரசன்** முதலியோர்க்கும் நம் நன்றி என்றும் உரியது.

இனி, இருநாள் மாநாட்டு, நான்கு நிகழ்ச்சிகளிலும் தலைமையேற்று நடத்திக் கொடுத்த தலைவர் பெருந்தகையார்க்கும், நிகழ்ச்சி

www.thamizham.net - Free E book No 7518

களில் கலந்து கொண்டு உரையும் பங்கும் ஆற்றிய அறிஞர் பெரு மக்களுக்கும், தென்மொழி அன்பர்களுக்கும், நம் நன்றியும் வணக்கமும் உரியவாகுக. இனி, மாநாட்டில் பங்கு கொண்ட அனைவர்கட்கும் கைத்தறியாடை போர்த்தி உதவிய வரவேற்புக் குழுத்தலைவர் மருத்துவர் **கோவிந்தனார்** அவர்களுக்கும், நம்முடன் மாநாட்டு பேடையிலிருந்து நிகழ்ச்சிகளைச் செவ்வனே நடத்தும் வகையில் துணைநின்ற புலவர் **இறைக்குருவனார், தென்மொழி மறைநித்தலின் பனார், தமிழூர் ப. அருளி, கோட்டை இராவணன், தென்மொழி சேர. ஆற்றலரசு, தென்மொழி ப. துரையரசன்,** பாவலர் **குமர நடவரச ஈவப்பனார்.** செ. **கண்ணன்** இன்னும் பெயர்கள் விடுபட்டார் அனைவர்க்கும் நம் நன்றியும் நல்வாழ்த்துகளும் உரியவாகுக.

இறுதியாக, இந் நன்றியுரை எழுதுகையில் என் உள்ளத்தும் உணர்விலும் நிறைந்து, மாநாட்டின் தொடக்கத்திலிருந்து இன்று



**சு. இளங்கோ**

வரை இடைவிடாது உழைத்து வரும் பொருளாளர் **சு. இளங்கோவின்** பணிவான தொண்டும் ஈடுபாடும் விலைமதிப்பற்றது. தமக்குற்ற அரசுப் பணியின் கடமையைச் செய்து முடித்த ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிக்குத் தவறுமல் வந்திருந்து இரவு 11, 12 வரையிலும், மனம் சலிக்காமலும், மலைவுறுமலும், இனிய நகை முகத்துடன் உ.த.மு.க. மாநாட்டுக் கணக்கு வழக்குச் சுமைகளை அவர் தாங்கிக் கொண்டது, உண்மையிலேயே என்னை நெகிழ்வித்தது; மனம் மகிழச் செய்தது; நன்றியுணர்வால் பெருமிதமுறச் செய்தது. இவ் விருபத்து மூன்று ஆண்டுத தென்மொழி வரலாற்றில் இவ்வாறு பொதுத் தொண்டில் ஓர் இம்மி நலமும் எதிர்பாராமல் என்னுடன் ஒத்துழைத்த சிறந்த தொண்டுள்ளம் வாய்ந்தவர் ஓரிருவரே! அவர்களுள் தலைசிறந்தவர் தம்பி **இளங்கோவே!** அவரை **'மிகச் சிறந்த தொண்டர்'** என நெஞ்சாரப் பாராட்டுகின்றேன்.

குளங்கோலும் கரையெனவே
 குவிந்தவருங் கொடைகளெல்லாம் ஒழுங்குசெய்து
களங்காண உழைத்தவருள்
 கனிவுடனும் பணிவுடனும் தொண்டுசெய்த
இளங்கோவன் எனும்பொருளர்
 இணையில்லாப் பணிசெய்தார்; தூய்மனத்தின்
வளங்கண்டு மிகமகிழ்ந்தோம்,
 **'மிகச்சிறந்த தொண்டர்'** எனும் பெரும்பேர் தந்தே!

உ.த.மு.க.வின் அமைப்புகள், செயற்பாடுகள் இனி அடுத்தபடி தொடர்ந்து பெரும்பயனெய்துதற்கு அனைத்து நல்லுளங்களும் துணைநின்றுதவுமாறு வேண்டுகிறேன். —**பெருஞ்சித்திரனார்.**

www.thamizham.net - Free E book No 7518

# சொல்லாய்வுச் சுற்றுக் கூட்ட நிகழ்வுரைகள்

(கடந்த 7-2-82-இல் சென்னை, மார்சல் சாலையில் உள்ள தமிழ், வடமொழி பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்த, சொல்லாய்வறிஞர் தமிழூர் ப. அருளியின், முதல் சொல்லாய்வுக் கூட்டத்தில், நிறுவன இயக்குநர் பா. **ஆறு அழகப்பனார்** நிகழ்த்திய வரவேற்புரைச் சுருக்கம்.)

தமிழ், வடமொழி ஆராய்ச்சி நிறுவனத்தில் பல நல்ல திட்டங்கள் கைகொடுக்கப்பட வேண்டும் என்பதனை, இந்த நிறுவனத்தினுடைய தலைவர் செட்டி நாட்டரசர் அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையில், கவின்கலைக் காட்சியாக ஒரு கோலக் காட்சியை (திரு. சாவி. தம்பிராசு அவர்களைக் கொண்டு) இந்த நிறுவனம் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியது. தமிழக ஆளுநருடைய துணைவியார் அவர்கள் தொடங்கி வைக்க, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய துணைவியார் முடித்து வைத்தார்கள். அடுத்து, தமிழெழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு 1978-ஆம் ஆண்டு கொண்டு வந்தது. கொண்டு வந்த அந்தத் திருத்தம் நடைமுறைக்குச் சரிவரக் கொண்டு வரப்படவில்லை என்பதனை அறிவதற்காக, கலந்துரையாடல் நிகழ்ச்சியாக ஒரு பெரிய கருத்தரங்கினை இரண்டு நாட்கள் இந்த நிறுவனம் மிகச் செம்மையாக நடத்திக் காட்டியிருக்கின்றது. தொடர்ந்து, மூன்றாவதாக, சொல்லாய்வுச் சுற்று என்ற இந்த ஆராய்ச்சிக் கூட்டத்தை இன்றைக்குத் தொடங்கியிருக்கின்றது. நூறு சொற்களை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு கூட்டத்திற்கும் பத்துச் சொற்களை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், பத்துக் கூட்டங்களில் நூறு சொற்களை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தக் கூட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கின்றோம்.

இந்தக் கூட்டம் இன்றைக்குத் தொடங்கப் பெற்று, வெற்றி நிறைவாக முடியும். முடிந்த பிற்பாடு, அடுத்த கூட்டத்தினுடைய நாளும், அடுத்த கூட்டத்தில் ஆயக் கூடிய சொற்களைப் பற்றியும் நம்முடைய சொற்பொழிவாளர் அவர்கள் கூற இருக்கிறார்கள் ... தமிழகத்தில் உள்ள பல ஆராய்ச்சி நிறுவனங்கள் பல வகைகளிலே செயல் பட்டு வருகின்றன. கே. கே. சா. அவர்களுடைய கொள்கைக்கேற்ப நிறுவப்பட்ட இந்த நிறுவனம் நல்ல திட்டங்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது என்பதற்காகச் சில கருத்துகளை உங்களுக்கு முன்னாலே வைத்தேன். 1974-இல் இந்த நிறுவனம் நிறுவப்பட்டது. தமிழக ஆளுநர்கள் எல்லாம் இதனுடைய தலைவர்களாக இருந்தார்கள். இப்பொழுது செட்டி நாட்டரசர் அவர்கள் தலைவராக இருக்கின்றார்கள். தமிழகத்தின் மிகச் சிறந்த பாவலர்களையும் அறிஞர்களையும் கொண்டு இந்த நிறுவனம் இயங்கி வருகின்றது. 1974-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தோராயமாக 80 கட்டுரைகளை இந்த

www.thamizham.net - Free E book No 7518

நிறுவனத்திலே ஆராய்ச்சிக் கட்டுரைகளாக வெளியிட்டிருக்கின்றார்கள் .... அந்த வகையிலேதான் இக் கூட்டம் நடைபெறுகின்றது.

தமிழ் அறிஞர்கள் இங்கே நிரம்ப வர வேண்டும், ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட நல்ல அமைப்பினை நாங்கள் இங்கே உருவாக்கியிருக்கின்றோம். தினமணி இதழில், இன்றைக்கு இந்தச் சொல்லாய்வுக் கூட்டம் நடைபெறுகின்றது, அனைவரும் வரவேண்டும் என்று வெளியிட்ட பிற்பாடு, தமிழகத்தினுடைய பல மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் நிறைய கடிதங்கள் வந்திருக்கின்றன. 'இப்படிப்பட்ட நிறுவனத்தில் வடமொழி ஆராய்ச்சி மட்டும்தான் நடைபெற்று வருகின்றது என்று நாங்கள கருதினேம். **பாவலரேறு** அவர்களை அழைத்து, சொல்லறிஞரை அழைத்து, தமிழ்ச் சொற்களை யெல்லாம் நீங்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியிருக்கின்றீர்கள். நிறுவனம் நல்ல வெற்றியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது' என்று பல தமிழறிஞர்கள் எல்லாம் எழுதியிருக்கின்றார்கள். சென்னையில் இருக்கின்ற ஓகி சுத்தானந்த பாரதியார் முதற்கொண்டு எழுதியிருக்கின்றார்கள் என்றால் எந்த அளவிற்கு இந்த நிறுவனம் வடமொழிக்கு மட்டும் சார்ந்திருக்கின்றது என்பதனைக் கருதியிருக்கின்றார்கள் என்பதற்காகச்சொல்லுகின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த என்னை, சில ஆண்டுகளுக்கு இங்கே பணிபுரிய வேண்டுமென்று கேட்ட பிறகு, இப்படிப்பட்ட திட்டங்களை யெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று நான் செட்டி நாட்டரசரிடம் கூறியதற்கு, அவர்கள் அதனை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள் — நல்லதொரு தலைப்பை இன்றைக்கு நாங்கள் சொல்லாய்வுக் கூட்டத்திற்கு எடுத்து வந்திருக்கின்றோம். நண்பர் **அருளி** அவர்கள் வந்திருக்கின்றார்கள் ; புதுச்சேரியிலிருந்து. அவர் வழக்கறிஞர் ! வழக்கறிஞர் என்பது மட்டுமன்று ! சொல்லாய்வுச் சுற்றிலே அவர் நல்ல ஈடுபாடு கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பலமுறை என்னுடைய அலுவலகத்தில் அவரோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, நான் பேசிக் கொண்டிருக்கின்ற பொழுது கேட்டிருக்கின்றேன். 'தகுதி' என்ற ஒரு சொல்லை மட்டுமே வைத்துக் கொண்டு 85 பக்கங்கள் அரியதோர் ஆராய்ச்சி நூலை அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். நல்ல பாவலர். அதோடு மட்டுமன்று; ஈழத் தமிழர்கள் மீது அதிக அக்கறை உள்ளவர். அந்த நாட்டைப் பற்றிக் கூட (அண்மையில் **சிங்கள அமர்க்களம்** எனும்) ஒரு நல்ல நூலை அவர்கள் எழுதியிருக்கின்றார். தம்முடைய வழக்கறிஞர் தொழிலோடு இப்படிப்பட்ட சொல்லாராய்ச்சியைச் செய்யக்கூடிய அறிஞர்களை, அருளியை மட்டுமன்று, முன்னாலேயே பல அறிஞர்களை இத் தமிழ் உலகம் பெற்றிருக்கிறது.

கா. சு.(பிள்ளை) அவர்கள் வழக்கறிஞர். இரா.பி.சேது(ப் பிள்ளை) அவர்கள் வழக்கறிஞர். அந்த வரிசையில் அருளி அவர்களும் வந்திருக்கின்றார்கள் என்று நினைக்கின்ற பொழுது, நல்ல தமிழ்

www.thamizham.net - Free E book No 7518

உள்ளத்தை நினைத்து, அவருடைய ஆராய்ச்சியுள்ளத்தை நினைத்து நான் பெருமைப் படுகின்றேன். அவர் மீது எனக்கு இப்படி ஈடுபாடு ஏன் ஏற்பட்டது என்று சொன்னால், தாலாட்டு என்ற சொல் எப்படி வந்தது என்று நாங்கள் இருவரும் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தோம். தால் + ஆட்டு = தாலாட்டு. நாக்கை ஆட்டுகின்ற காரணத்தினால் தாலாட்டு. எனவே, தாலாட்டுப் பாடுகின்ற பொழுது, தாய் வந்து ரே ரே ரே என்று சொல்லுகின்றார்; அல்லது லு லு லு என்று சொல்லுகின்றார்; அல்லது ரா ரா ரா என்று சொல்லுகின்றார்கள். நாக்கை ஆட்டுகின்ற காரணத்தினால் 'தாலாட்டு' என்று சொல்லப் பெறுகிறது. அதுபோல், 'ஒப்பாரி என்றால் என்ன பொருள்? எந்த வகையிலே ஒப்பாரி வந்தது என்று (அவரிடம்) வினவி, ஒப்பு + வரி = ஒப்பாரி என்று ஆகியிருக்கலாமா என்று நான் கேட்டேன். எல்லோரும் ஒப்புக்குத்தானே அந்த இசைப்பாட்டை வைக்கின்றார்கள். அதன் காரணமாக ஒப்பாரி என்று ஆகியிருக்கலாமா என்பது என் எண்ணம். அதற்கு அவர், 'அப்படி இருக்காதையா. அது, 'ஓ' என்று பாரித்தல். உடம்பு கிடக்கின்றது; இறந்த உடம்பைக் கண்டு ஓ, ஆ என்று பாரிக்கின்றார்கள். அந்த ஒலியை எழுப்புகின்றார்கள். எனவே அந்தத் தொடர்பாக ஒப்பாரி என்று கூட வந்திருக்கலாம்' என்ற அளவுக்கு உடனடியாக அதைச் சொன்னார். சொன்னவுடனே இன்னும் சில சொற்களையெல்லாம் நாங்கள் கேட்டோம். கேட்டவுடனே அதற்கெல்லாம் அவர்கள் மறுமொழி சொன்னதைப் பார்த்த பொழுது, எந்த அளவுக்கு அந்தப் பாவாணருடைய அழுத்தமான தமிழ்ப் புலமை அவரிடம் பதிந்திருக்கிறது என்பதை நினைத்து உண்மையாகவே வியந்துதான் இந்தத் திட்டத்திற்கு அவரை நான் ஆளாக்கினேன். 'நீங்கள் முதன்முதலாகப் பத்துச் சொற்களையும் தந்துவிட வேண்டும். அதைத் தமிழகம் முழுதும் நாங்கள் தெரிவித்து விடுவோம். அவர்கள் மறுப்புகளுக்கெல்லாம் நீங்கள் விளக்கம் தரவேண்டும். எனவே வந்த பிற்பாடு நாங்கள் இந்தச் சொற்களை ஆராய்ச்சி செய்யப் போகின்றோம் என்று நினைத்து நீங்கள் உங்கள் விருப்பப்படிப் பேச அந்த வகையில் அதற்கு அணியமாக வராமல் இருக்கக் கூடாது. இந்த வகையில் நீங்கள் பேச ஒப்புகின்றீர்களா?' என்று கேட்ட பிறகு அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அந்த வகையில்தான் இன்று பத்துச் சொற்களைத் தருகின்றார்கள். அடுத்தக் கூட்டத்திற்கும் இங்கு வந்திருக்கின்றவர்கள் உங்கள் முகவரியைத் தந்துவிட்டுச் செல்லுங்கள். தரக் கூடிய அந்தப் பத்துச் சொற்களை நாங்கள் முன்கூட்டியே உங்களுக்குத் தெரிவித்து விடுகின்றோம். நீங்களும் அதற்குரிய அணியத்துடன் வருகின்ற போழ்து நல்லதொரு தமிழாராய்ச்சியை இந்த நிறுவனம் செய்து வெளிப்படுத்தியது என்ற பெருமை, பொறுப்பிலே இருக்கக் கூடிய எங்களுக்கு ஏற்படும் என்பதற்காகச் சொல்லுகின்றேன். **பாவலரேறு ஐயா அவர்கள் தலைமைதாங்கி நடத்தித் தருகின்றார்கள் என்று**

www.thamizham.net - Free E book No 7518

**சொல்லுகின்ற பொழுது வரக்கூடிய ஆராய்ச்சி செம்மையான ஒரு செம்பதிப்பாக வருமென்பதிலே ஐயமில்லை.** அவர்களைப்பற்றி விரிவாக விளக்கமாக அறிமுகப்படுத்தக் கூடிய அளவிற்கு எனக்கு வரலாறோ பட்டறிவோ அறிவோ இல்லை.

தமிழுலகம் இன்றைக்கு நன்கு அறிந்த ஒரு தானைத் தலைவர் அவர்கள்! தமிழுக்காகப் பாடுபட்டு, என்னுடைய தமிழ், என்னுடைய உயிர், என்னுடைய உடைமை தமிழுக்கே என்று இன்றைக்கு அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்து மக்களுக்கு மட்டுமன்று, உலகத் தமிழர் அனைவர்க்கும் அவர்கள் வைத்திருக்கின்ற ஒலி பெருக்கியிருக்கின்றதே, அந்த ஒலி இப்பொழுதுதான் எங்குப் பார்த்தாலும் கேட்கத் தொடங்கியிருக்கின்றது. இந்த நிறுவனத்திற்கெல்லாம் அவர்கள் கால் வைத்து வந்து நல்லதோர் ஆராய்ச்சியை நடத்தித்தர அவர்கள் ஒப்புக் கொண்டதற்காக இந்த நிறுவனத்தினுடைய தலைவர் சார்பாகவும், நிறுவனத்தினுடைய சார்பாகவும் என்னுடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். **என்னென்ன கருத்துகளையெல்லாம் அவர்கள் எதிர்காலத்தில் சொல்கின்றார்களோ, அவற்றை இந்நிறுவனம் நன்குச் சிந்தித்துச் செயல்படும் என்பதையும் நான் அவர்கட்கு எடுத்துச் சொல்கின்றேன்.** இன்றைக்குப் பத்துச் சொற்களை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பத்துச் சொற்களைப் பற்றியும் அருளி அவர்கள் சொல்லவிருக்கின்றார்கள். அந்தக் குறுகிய நேரத்திலே அவர்கள் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சுருக்கமாகச் சொல்லுவார்கள். நாங்கள் நூலாக வெளியிடுகின்ற பொழுது விரிவாக அதனை அவர்கள் எங்களுக்கு எழுதித் தருதல் வேண்டும். **நூறு சொற்களையும் அழகான ஒரு படைப்பாக இந் நிறுவனம் எதிர்காலத்திலே வெளியிடவிருக்கின்றது...** நல்ல தமிழ்ச் சொற்களை யெல்லாம் நாம் சொல்வதறகு அஞ்சுகின்றோம்; வெட்கப்படுகின்றோம், அல்லது மறந்து விடுகின்றோம். அதனை நாம் பயன் படுத்தவில்லை. நம்மிடையே இருக்கின்ற பெருஞ்சித்திரனாரைப் போன்றவர்களெல்லாம் இதை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். 'மைக்' எனபதற்கு பகரமாக (பதிலாக) வேறு எதையும் பயன்படுத்தவில்லை. 'Fan' என்பதை Fan என்றே பயன்படுத்துகின்றோம். 'Cycle' என்றே பயன்படுத்துகின்றோம். 'Cinema' என்றே பயன்படுத்துகின்றோம். நான் தாய்லாந்துக்குப் போன பொழுது, இப்படிப்பட்ட அடிப்படைச் சொற்களை யெல்லாம் அவர்கள், ஆங்கிலத்திலே இருந்தாலும் கூட, ஆங்கிலச் சொல்லைப் பயன் படுத்தாமல் தங்களுடைய தாய்லாந்து மொழியிலேயே அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் 'மைக்' என்ற சொல்லைப் பயன் படுத்துவதே கிடையாது. 'Fan' என்ற சொல்லைச் சொல்லுவதே கிடையாது. 'Cycle' என்ற சொல்லைச் சொல்லுவதே கிடையாது. தாய்லாந்திலே என்ன சொல்லோ அதைச் சொல்வதைத்தான் தங்களு

www.thamizham.net - Free E book No 7518

டைய சொந்தத் தாய்மொழி உணர்ச்சியாக அவர்கள் குறித்து வைத்திருக்கின்றார்கள். அவர்களிடம் நாங்கள் உரையாடிய பொழுது அதனைக் கண்கூடாகக் கண்டோம்.

அப்படிப்பட்ட நல்ல தமிழுணர்ச்சிகளெல்லாம் வரவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட தமிழ்ச் சொல்லை எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றோம். கடைசியாக, 'ச' என்ற சொல்லில் ஒரு சொல் வரவேண்டும் என்பதற்காக, 'சட்டம்' என்ற சொல்லை நான்தான் சேர்த்தேன். தொல்காப்பியர் காலத்தில் 'ச' என்பது மொழிக்கு முதலிலே வரவில்லை என்று சொல்கின்றார்கள். ஆகவே 'சகரக் கிளவியும் அவற்றோரற்றே' என்ற சொல்லி, 'ச' என்பது அந்தக் காலத்திலே வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, நண்பர் அருளி அவர்கள் 'ச' என்பது தொல்காப்பியர் காலத்திலே வருகிறது என்று சொல்வாரேயானால் ஒரு நல்லதோர் ஆராய்ச்சியை இன்றைக்கு முடிவு செய்கின்றோம் என்றுகூடப் பொருளாகும். காரணம், ஒரு தமிழ்த் துறைத் தலைவர் அவர்கள் ஓர் ஆராய்ச்சி செய்கின்ற பொழுது, 'சட்டம்' என்பது எப்பொழுது வந்தது? சட்டம் என்பதற்கு என்ன பொருள்? எப்படியெல்லாம் வந்தது என்று அவராகத் துறையிலே வந்து கேட்டார். அதற்காக அந்தச் சொல்லை நாங்கள் சேர்ந்தோம். இன்றைக்கு அந்தத் தமிழ்த் துறைத் தலைவர் கூட வந்திருக்கின்றார் எனவே நல்லதொரு ஆராய்ச்சியை இந்த நிறுவனம் செய்கின்றது. அதற்கு நிரம்ப நீங்கள் வந்திருக்கின்றீர்கள். தொடர்ந்து பத்துக் கூட்டங்களுக்கும் வரவேண்டும். இந்தக் கூட்டங்களிலே உள்ள குறைபாடுகளெல்லாம் நீக்கி, அடுத்த கூட்டத்தை மிகவும் மேலும் செம்மையாக நாங்கள் நடத்தித் தருவோம். இந்த ஆராய்ச்சியினுடைய வளர்ச்சியில் நாங்கள் பெருமைப் படுகின்றோம்.

நமக்குள்ள அகரமுதலிகளில் அல்லது அகராதிகளில் நிறைய வேற்றுமொழிச் சொற்கள் கலந்துள்ளன. அவற்றையெல்லாம் நாம் தெரிந்து கொள்கிறபடி நம்மிடையே மொழிப் பயிற்சி ஏற்பட்டு வருகிறது. ஆனால் அவற்றை நீக்குவதற்குரிய ஆராய்ச்சி இன்னும் நம்மிடையே வளரவில்லை. அப்பொழுதுதான் என்னென்ன வகைகளிலே எந்தெந்த மொழிச் சொற்கள் இருக்கின்றன என்று நாம் கண்டு கொள்ள முடியும். அவை பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு இவ்வாய்வுத் தொடர் நமக்குத் துணை செய்யும் என்று நான் நம்புகிறேன். வணக்கம். o

## அன்பர்கள் கவனிக்க

**பொறுப்பாசிரியர்** அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— **அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7518

# தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

*(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956)*

19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம்: **சென்னை-5**
2. கால முறை: **திங்கள் ஒருமுறை**
3. அச்சிடுவோர் பெயர்: **திருவாட்டி, மா. தாமரை.**
   இனம்: **தமிழர்.**
   முகவரி: **தென்மொழி அச்சகம், சென்னை-5.**
4. வெளியிடுவோர் பெயர்: **திரு. பெருஞ்சித்திரனார்.**
   இனம்: **தமிழர்.**
   முகவரி: **தென்மொழி அச்சகம், சென்னை-5.**
5. ஆசிரியர் பெயர், முகவரி: **திரு. பெருஞ்சித்திரனர். சென்னை-5.**
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். **திரு பெருஞ்சித்திரனர், சென்னை-5.**

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும நானறிந்த வரை உண்மையென்று உறுதி கூறுகிறேன்.

1—3—1982,
சென்னை-5.

—பெருஞ்சித்திரனார்.
(ஒப்பம்.)

---

# அன்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை

தென்மொழி அன்பர்களின் அழுத்தமான கொள்கைப் பற்றையும் தமிழ் ஈடுபாட்டையும், உண்மையான அன்புணர்வையும் தவறுகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், அன்பர்கள் ஒரிருவர், தங்களைத் தீவிரமான கொள்கைச் செயற்பாட்டுக்காரர்கள் என்று கூறிக் கொண்டு, திருப்பூர், வடவார்க்காடு, தென்னார்க்காடு, சென்னை முதலிய இடங்களில் உள்ள உறைத்த தென்மொழி அன்பர்களின் முகவரிகளைக் கேட்டறிந்து கொண்டு. அவர்களைத் தேடிப் பிடித்து அவர்களுடன் ஓரிரு நாட்கள் தங்குவதும், அவர்கள் நம்பும்படி பலரின் தொடர்புகள் தங்கட்கு உண்டென்று கூறி, கொள்கைச் செயற்பாட்டுக் கென்றும், வேறுவேறு ஊர்களுக்குப் போகவென்றும் பலவகையில் பணம் தண்டி வருவதாகவும் கேள்விப் படுகிறோம். அவ்வாறு யாரும் தென்மொழிச் சார்பில் அனுப்பப் பெறவில்லை என்று அன்பர்கள் உணர்வதுடன், அன்பர்கள் அவர்களிடம் ஏமாறு திருக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

---

www.thamizham.net - Free E book No 7518

# தமிழ் நாட்டினத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை

**வெங்காலூர் 'குணா'**

(மாநாட்டில் 'குணா' அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் விரிவு)

**வரலாறும் பண்பாடும்**

மார்க்சியத்தின் விடுதலை இலக்கணத்திற்கு என தனி குமுகியல் அறவியல்(ethical)பார்வை உண்டு. அதுவே வரலாற்றுப் பொருள்முதலியல் என்னும் வரலாற்று விளக்கம். இயங்கியல் முறையில் ஒரு நாட்டின் வரலாற்றையோ உலக வரலாற்றையோ தனித்தும்இணைத்தும் பயில்கின்ற முறையியல் (methodology) அது.

**மார்க்சியம் வெறும் பொருளியல் இலக்கணம் மட்டுமன்று; அது மாந்தனை நிறைவு படுத்தித் தன்னுரிமைப் பெற்ற புது மாந்தனை உருவாக்கும் பண்பாட்டு இயக்கம்** தேங்கி இறுகிப் போகாமல் தன்னையே புதுப்பித்துக் கொண்டும், ஒழுங்குப் படுத்திக் கொண்டும் கழிப்புகளைக் கழித்துக் கொண்டும், புதியனவற்றைச் செரித்துக் கொண்டும், இடையறுது மக்கள் இனம் உயிருட்டமுடன் இயங்க வழிசெய்கின்ற இயக்கம் ஒப்புரவு வாழ்வியலைச் செப்பப்படுத்தி, புத்தம்புது அருவிபோல் குமுக வளர்ச்சியைச் செய்வித்துப் பொதுவுடைமை நிலையை நோக்கி நடை பயிலச் செய்யும் முடிவுருப் பண்பாட்டுப் புரட்சி இயக்கம். உழைக்காமல் உண்பது தீய அறம் என்னும் உளவியல் நிலையை உருவாக்கிப் பொதுவுடைமை அறத்தை வலுப்படுத்தி வளர்க்க வல்ல உளவியல இயக்கம்.



**தமிழகத்தில் பொதுவுடைமை.**

அத்தகைய பொதுவுடைமைக் கோட்பாடு தமிழகத்திற்கும் தேவைதானே? பொதுவுடைமைப் பார்வை இல்லாத விடுதலை குருட்டுத்தனமாகவே இருக்கும். உலகையெல்லாம் குலுக்கி வந்த அந்தப் **பொதுவுடைமைக் கொள்கைத் தமிழகத்தில் நன்கு காலூன்றுததன் காரணம் என்ன? தமிழகப் பொதுவுடைமையரும் உலகப் பொதுவுடைமை இயக்கமுமே அதற்குக் காரணம்.**

மார்க்சும் எங்கெல்சும் 1847-ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க **பொதுவுடைமைக் கட்சி அறிக்கையை** வெளியிட்டபோது, உலகு என்பது அவர்கட்கு மேலை உலகாக மட்டுமே பட்டது. அவர்கள் தொடங்கிய **முதலாம் பொதுவுடைமைப் பேருலகு** மேலை உலக நாடுகளில் மட்டுமே செல்வாய்ப்புடையதாக இருந்தது. அந்நிலையில்

www.thamizham.net - Free E book No 7518

ஐரோப்பா முழுவதிலும் ஒரே காலத்தில் புரட்சியைச் செய்ய முனைந்த முயற்சி 1848-ஆம் ஆண்டு புரட்சியின் வாயிலாகத் தோற்றது. அத் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து வருகையில், 1871-இல் பாரீசு கம்யூன் நிறுவப் பெற்றது. உலகிலேயே முதன் முதலில் நிறுவப்பட்ட பாட்டாளிய வகுப்பு ஆட்சி அது. உலகப் பாட்டாளி வகுப்பு முதன்முதலில் மேற்கொண்ட உணர்வுச் செறிவுடைய மாந்த முயற்சி அதுவேயாம். இரு திங்கள் நிலைத்து, பின்னர் அது தூக்கியெறியப்பட்டது.

பாரீசு கம்யூனில் தோல்விகள் தந்த படிப்பினைகள் பல. முதலாளிய ஆட்சி அமைப்புக்குள் இருந்தே மெள்ள மெள்ளத் தேர்தல் வழியில் ஆட்சியைக் கைப்பற்றுவது என்னும் மெல்லியல் சீர்திருத்தப் போக்கு புரட்டல் கோட்பாடாக வளர்ந்தது. புரட்சி வழியில் ஆட்சியைக் கைப்பற்றி, பாட்டாளிய வகுப்பு வல்லாண்மை வழியாகக் குமுக மாற்றத்தை நிலைப்படுத்துவது என்னும் தெளிவு அதனுடைய எதிர்மறையாக நின்றது. அந்நிலையில், முதல் பொது உடைமைப் பேருலகத்திற்குள் எழுந்த பிளவுகளும் கருத்து முரண்பாடுகளும் அதனைக் கலைத்துவிடச் செய்தன. மார்க்சின் மறைவிற்குப் பின்னர் எங்கெல்சு இரண்டாம் பேருலகை நிறுவினார். முதலாம் உலகப் போர் மூள, அந்த இரண்டாம் பேருலகத்திற்குள் அதே வகைக் கருத்து முரண்பாடுகள் மீண்டும் தலைத் தூக்கின.

அந்நிலையில்,புரட்டர்களின் போக்கைச் சாடி உருசியா என்னும் தனி நாட்டில் புரட்சியை நாடினார் இலெனின். ஒரே பொழ்து உலகளாவிய புரட்சி நடவாது என்னும் நடைமுறை உண்மையை மார்க்சிய இயங்கியல் அறிவைக் கொண்டு இலெனின் உணர்ந்ததன் விளைவே பழைய உருசியாவில் அவர் தலைமையில் வெற்றி பெற்ற 1917-ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சி.ஒரே காலத்தில் உடனிகழும் உலகம் தழுவிய புரட்சி என்னும் கொள்கையை டிராட்ச்கி போன்றோர் முன்வைத்து, தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் எனச் சொல்லி அடம் பிடித்ததும் உண்டு. ஆயினும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்ற தனித்தன்மைகளை வைத்து, அவ்வப்புரட்சிக்கு உரிய நிலனும் பொழுதும் வேறுபடுகின்ற அறிவியல் உண்மையை உணர்ந்தவராக இலெனின் இருந்தார். முதலாளியத்தின் ஒரே சீரான வளர்ச்சியின்மையைக் கருதி, நிலைமை நாட்டுக்குநாடு மாறுபடு-வதை உற்றறிந்தார். உருசியாவில் மட்டும் புரட்சி என்றும்; சாரிய உருசியாவில் அடைக்கப்பட்டுக் கிடந்த உருசியர் அல்லாத நாட்டினங்களுக்குத் தனிநாடுரிமை (right of self-determination) உண்டு என்றும் இலெனின் அதனால் உறுதி கூறியதே அப்புரட்சியின் வெற்றிக்குக் காரணம்.

உலகத்திற்கு என ஒரு பொதுவுடைமை நடுவத்தைக் கட்டுக் கோப்பாகக் கட்டியமைத்துக் கொண்டு, அது தருகின்ற விளக்கங்

www.thamizham.net - Free E book No 7518

களையும் உத்தரவுகளையும் தழுவி, எந்தவொரு நாட்டிலும் இதுவரை புரட்சி வெற்றி பெறவில்லை என்பதற்கு அக்டோபர் புரட்சியே ஒரு சான்று. இரண்டாம் பொதுவுடைமைப் பேருலகை விட்டு, இலெனின் வெளியேறிய பின்னரே உருசியாவில் புரட்சி வெற்றி பெற்றது.

அதேபோல், இலெனின் மூன்றும் பொதுவுடைமைப் பேருலகை நிறுவினார். அதனாலும் எந்த நாட்டிலும் புரட்சி தனித்து வெற்றிபெற முடியவில்லை. மூன்றும் பேருலகத்தில் மிக நேரிய தலைவரான இசுடாலினின் கணிப்புகளும் வழிக்காட்டுதலும் உத்திரவுகளும் சீனப் புரட்சிக்குத் தடையாகவே இருந்தன. சீன மக்களின் வரலாற்றிலும் மெய்யியலிலும் பண்பாட்டிலும் குமுக உளவியலிலும் நன்கு ஊன்றி நின்ற மாவோ, இசுடாலின் வகுத்த வழிமுறையை ஏற்க மறுத்து, சீனத்திற்கேயுரிய தனித்தன்மையுடனும் நாட்டுணர்வுடனும் ஒன்றிய **புதிய குடியாட்சி** (NewDemocracy) என்னும் கொள்கையையும் உருவாக்கினார். மக்கள்போர் என்னும் நீண்ட கால விடுதலைப்போர்முறையையும் வகுத்துக் கொண்டார். மார்க்சிய மெய்யியலுக்குப் புதிய வளர்ச்சி நிலைகளைத் தோற்றுவித்து, அம் மார்க்சிய இயங்கியலை உண்மையான ஒருமையியலாக (monism) வளர்த்தார்.

**மீண்டும் கீழைக்காற்று:**

உலகளாவிய குடிபேற்றச் சுரண்டலின் வாயிலாகத் தன்னுட்டு வல்லரசு முதலாளிகளால் போடப்பட்ட எச்சில்களை உண்டு புரட்சியை மறந்து புரட்டர் தலைமையில் முடமாகி நின்றது, மேலை ஐரோப்பிய நாடுகளின் பாட்டாளி வகுப்பு. அப்போது வல்லரசு முதலாளியத்தை எதிர்த்த ஆசிய நாடுகளின் புரட்சிகளே உலகச் சிறப்புப் பெற்றன. உலகப் புரட்சியின் நடுவம் கிழக்குலகத்தின் பக்கம் பெயர்ந்தது. அப்போது அனைத்துலகியத்தைத் தனித்தனி நிலனும் பொழுதும் (space and time) அற்ற வரட்டுக் கொள்கையாகப் பார்த்த நிலை மறையத்தொடங்கியது. நாட்டுணர்வு இல்லாத அனைத்துலகியல் என்பது ஓர் இயங்காவியல் குழறுபடி என்பது விளங்கியது; அதை முதன்முதலில் செய்தவர் மாசேதுங். சீனத்திற்கேற்ற மரபுகளுடனும் நாட்டு விடுதலை உணர்வுடனும் அவர் மார்க்சியத்தைப் பழகினார். அந்நிலையில், வடிவம் மட்டுமே மாறியதே தவிர, மார்க்சியத்தின் உள்ளுயிர் மாறவில்லை. அவ்வுள்ளுயிர் மாளாமல் தொடர்ந்து வாழவே செய்கின்றது. அப்போது மேலைக் காற்று ஓய்ந்து மீண்டும் கீழைக்காற்று ஓங்கியது. கிருத்துவ மதத்தின் கட்டுக்கோப்பான அதிகார வதுப்புத் தோரணையுடன் கூடியதாக இருந்த ஐரோப்பியரின் குறிப்பாக உருசியரின் முரட்டுத்தன்மையுடனான ஒப்புரவு அமைப்பிலிருந்து மாறுபட்டதாக அவர் கண்ட ஒப்புரவியல் இருந்தது. மாந்தநேயத்தைத் தழுவியதாகவும் மக்களிடம் இழையோடிய ஆசியாவிற்கே இயல்பானதாகிய இயங்கியல் மரபுக்கு ஏற்றதாகவும் அஃது அமைந்தது.

www.thamizham.net - Free E book No 7518

செத்துப் போனதும் புரியாததுமான இலத்தின் மொழியைப் போற்றிய கத்தோலிக்க மத உலகத் தலைமைக்கு எதிராகக் கலகக் கொடிஉயர்த்திய கத்தோலிக்க மறுப்பியக்கம் (Protestant movement) தேசிய மொழிகளைப் போற்றி நாட்டுக்கு நாடு வேறுபடுகின்ற பண்பாடுகளுக்கு ஏற்ப தனித்தனித் தலைமைகளை உருவாக்கிக் கொண்டதற்கு நிகராகப், பொதுவுடைமை இயக்கத்தில் உலகத் தலைமை இன்று வேண்டப்படாததாகி இருக்கின்றது.

**தென்காற்று உருவாகின்றது!**

**ஆனால் இந்தியப் பொதுவுடைமையரோ இத் துணைக் கண்டத்தின் நிலையைமறந்து பார்ப்பன வரட்டுத்தனத்திற்கு ஏற்ப மார்க்சிய அறிவை வாய்ப்பாட்டு மந்திரங்களாகச் சுருக்கிக் கெடுத்தனர்.** உருசிய சீனப் புரட்சிகளின் பட்டறிவுகளைக்குருட்டுத்தனமாகப் பார்த்துப் பழகி வந்தார். இத் துணைக்கண்டத்தின் தனித் தன்மைகளை மறந்து தனி ஆய்வும் தேர்வும் இன்றிப் பாலை நிலத்தில் மார்க்சியத்தை விதைத்தனர். பண்பாட்டு வேரில்லா பார்ப்பனிய-குட்டி முதலாளியப் பொதுவுடைமைஇயக்கத் தலைமை, திராவிட இயக்கத்தின் தனித்தன்மைகளையும் குறைகளையும் நிறைகளையும் பார்க்கத் தவறி, மார்க்சியத்தை வரட்டுக் கோட்பாடாக உருக்குலைத்தது. சோற்றைத் தெய்வமாக்கிய உதிரி(lumpen) பார்வையில் அவர்கள் உழன்று கிடந்தனர். ஒரேகால இந்தியப் புரட்சி என்னும் டிராட்ச்கிய குழறுபடிக்கு அறிந்தோ அறியாமலோ ஆங்கிலத்திடம் காதல்கொண்ட அரைத் துரைகள் கடைவிரித்தனர். கூலிப் போராட்டத்தையே வகுப்புப்போராட்டம் என்று கருதி ஏமாறினர். தமிழகத்தின் தரகர் தவிர்த்த பிற வகுப்புகள் யாவும் மார்வாரி-குசராத்திய முதலீட்டிடம் அடிமையுண்டுக் கிடப்பதையும் ஏறிட்டுப் பார்க்க மறுத்தனர். **'பாரதம்' என்னும் புதியபார்ப்பனியச் சூழ்ச்சியும் இந்து மதமும் ஆங்கில மொழி மீதிருக்கும் மயக்கமும் புரட்சிக்குப் பெரும் தடைகள் என்பதையும் உணர மறுத்தனர். பொதுவுடைமைக் கருத்து தமிழக மக்களிடம் ஒன்றுததற்கான காரணம் 'ஓரியந்தியக் கோட்பாடே'!**

நாட்டின ஒடுக்குமுறை, வகுப்பு ஒடுக்குமுறை என்னும் இரண்டு வகைச் சுரண்டல்களில், நாட்டின விடுதலை, வகுப்புப் போராட்டத்திற்கு ஊக்கம் தரும் என்னும் புரட்சி இயங்கியலை அவர்கள் கற்கத் தவறினர். **சாதி போன்ற முதலாளியத்திற்கு முந்திய குமுகத் திணைகள் புரட்சி வந்தால் தானே போய்விடும் என்று பொய்யாக நம்பினர். சாதி எதிர்ப்புக் கடமையை வகுப்புப் போராட்டத்துடன் இணைக்கின்ற இயங்கியலைப் பழகத் தவறினர்.**

இந்நிலையில தமிழகத்தில் பொதுவுடைமை வேரூன்ற நிலைக்குப் பெருங்காரணம் புரட்டல் கோட்பாடும் மிகு தீவிர 'இடதுசாரி' அணைத்துலகியமும் ஆகும். எண்ணத்திலும் செயலிலும் தற்சார்பு இல்லா அடிமைப் போக்கே அவையாம். அவர்களைக் குற்றஞ் சொல்லிக்

www.thamizham.net - Free E book No 7518

கடிவதும், திருந்த மறுத்தால் தனிமைப்படுத்தி அவர்களின் கய மையை அம்பலப்படுத்துவதும் தமிழகத்தில் புரட்சியை விழை- வோரின் முகாமையான கடமை. பிறநாட்டுப்பணத்தை நம்பிக் கட்சி நடத்துவதால் புரட்சி விளையாது. கொள்கை அடிமைத்தனமும் கோணலும் பெருத்தனவே விளைவுகள். அவற்றைச் சுட்டிக் காட்டித் தமிழக மக்களின் விடுதலை உணர்வோடு ஒன்றி, தமிழக மக்களை நம்பி, வல்லரசு எதிர்ப்பு-நிலக்கிழமை எதிர்ப்புக் கடமைகளை ஆற்று வதே தமிழகப் புரட்சிக்கும் அதன் வெற்றிக்கும் வழிகோலும்.

இந்நிலையில், தமிழ் நாட்டினத்திற்குப் பொருந்திய பொது உடைமைக் கொள்கையை வளர்த்தெடுப்பது எங்ஙனம்?

தனிநிலையைத் தனித்து வைத்து ஆய்வது என்பதே மார்க்சியத்- தின் உட்பொருள். அவ்வகையில், தமிழ்நாட்டிற்கே உரிய தனித் தன்மைகள் உண்டு. அவற்றை இனங்கண்டு கொள்வது முதற் கடன். தமிழகம் முற்றுக அடிமைப்பட்டுக் கிடக்கும்நாடு. அதன் தொழில்கள் பெரும்பாலும் குசராத்திய, மார்வாரியப் பெரு முதலாளிகளிடமும் அவர்களையும் ஆட்டிப் படைக்கின்ற பன்னாட்டு நிறுவனங்களோடு இணைந்துச் செயல்படுகின்ற தமிழ்ப் பார்ப்பன முற்றுடைமைக் (monopolist) குடும்பங்களிடமும்; நாட்டுக்கோட்டைச் செட்டியார், நாயுடு போன்ற சாதிகளைச் சேர்ந்த குடும்பங்களின் பேருடைமைக ளிடமும் அடிமைப் பட்டுக் கிடக்கின்றன. டி. வி. சுந்தரம் ஐயங்கார் குடும்பம், சேசசாயி குடும்பம், சிம்சன் குழு குடும்பம், ஈசு வரன் குடும்பம், கத்தூரி ஐயங்கார் குடும்பம், டி. டி. கே. குடும்பம் போன்றவை அவற்றில் சில.

அவற்றில் டி. வி. எசு. குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். அக் குடும்பத்திற்குரிய குழுமங்களில் சில.

லூக்காசு- டி.வி.எசு லிமிட்டெட் (பிரிட்டனுடன்தொழிற்கூட்டு)
பிரேக்சுஇந்தியா லிமிட்டெட் (பிரிட்டனுடன் தொழிற் கூட்டு)
வீல்சு இந்தியா லிமிட்டெட் (பிரிட்டானிய டன்லப் குழுமத் துடன் தொழிற் கூட்டு
மெட்ராசு ஆட்டோ சர்வீசு (ஆங்கில அமெரிக்கத் தானியங்கி உறுப்புகள் விற்பனை)
சுந்தரம்-கிளேய்ட்டன் லிட். (பிரிட்டனுடன் தொழிற்கூட்டு)

இவை யாவும் இந்தியாவிற்கு அப்பாலுள்ள புறநாட்டு முதலீடுகளிடம் ஆட்பட்டு இருக்கின்ற தரகு அமைப்புகள்.

இவற்றில் சிம்சன் குழுவைச் சேர்ந்த அமால்கமேசன்சு இரெப்கோ லிமிட்டெட் குழுமத்தை எடுத்துக் கொள்க. 1978-ஆம் ஆண்டில் இதன் இயக்குநர்கள்: ஏ. சிவசைலம்(தலைவர்), எம். வி. வெங்கட்ராமன், ஏ. கிருட்டிணமூர்த்தி, சர். சி. மெக்கரத், ஏ. பி. ஆவரி, எப். எச். நியூட்டன், பி. என். கோசுலா, என். எசு. பட், (சி. சி. மெக்ரத்துக்கு மாற்றுள்) சே. டேவி. (ஏ. பி. ஆவரிக்கு மாற்றுள்).

www.thamizham.net - Free E book No 7518

## தமிழீழத்தலைவர், தமிழினவிடுதலை இயக்க முன்னோடி
# நாவலர் அமிர்தலிங்கனார் தலைமையுரை

(8-11-81 காலை நடந்த தமிழினக் காப்பு மாநாட்டில் ஆற்றிய தலைமையுரை)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர் தமிழினப் பாதுகாவலர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்களே! தந்தை பெரியார் வழியில் தமிழினத் தன்மானத்தைத் தவிராது காத்து வைத்திருக்கின்ற தளபதி, பேரன்பிற்குரிய திரு. **வீரமணி** அவர்களே! இங்கு உரையாற்ற அமர்ந்திருக்கின்ற பேராசிரியர்களே! பாவோகி **சுத்தானந்த பாரதியார்** அவர்களே! தமிழ்ப்பெருப் அறிஞர் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் அவர்களே! இங்குரையாற்றக் காத்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே! என் அருமைத் தம்பி தங்கைகளே! பாவேந்தர் பாரதிதாசன், 'மக்கள் தொகுதி எக்குறை-யாலே மிக்க துன்பம் மேவுகின்றதோ, அக்குறை தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தோனைச் சிக்கென ஈன்று சீர் பெறல் இயற்கையாம்' என்று கூறினார். 'சாரின் கொடுமை தாங்கா உருசியம், ஏருற லெனினை ஈன்றேதீரும்' என்று சொல்கிறார்.

அதைப்போலவே, தமிழினம் தன் நீண்ட வரலாற்றில் பல்வேறு மேடுபள்ளங்களைக் கண்டிருக்கின்றது. தாழ்மை உயர்வுகளைக் கண்டு இருக்கின்றது கொடி கட்டிக் கடல் கடந்த ஆட்சிக் காலத்திலும் அடிமைகளாக்கிக் கப்பல்களில் ஏற்றிக் கூலி வேலை செய்ய அமர்த்தப் பட்ட காலத்திலும் தமிழினத்தின் வரலாறு மாறி மாறி நிகழ்ந்-திருக்கிறது. ஆனால் 19-ஆம் நூற்றுண்டில் ஐரோப்பிய ஆளுமையில் (ஆதிக்கத்தின்) ஓர் ஆணையின் கீழ் தமிழினம் முற்றாக அடங்கியிருந்த அக்காலத்திலே, நாட்டின் விடுதலையே நாட்டம் கொண்டவர்கள் தேசப்பற்றை ஊட்டிக் கொண்டிருந்த சூழ்நிலையிலே, அந்தத் தேசப்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

போட்டுள்ள பங்கு முதலீடு ரூ. 50, 00, 000. அதாவது ரூ 10 மதிப்புள்ள 5, 00, 000 நிகரப்(equity) பங்குகள். அவற்றில் 3, 75, 035 பங்குகள் பின்வருமாறு பிரித்துத் தரப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| ஆத்திரேலிய நாட்டு இரெப்கோ லிமிட்டெட் | ...... | 2, 45, 000 |
| சிரிராம விலாசு செர்வீசு லிட்: சென்னை | ...... | 60. 000 |
| பைமெட்டல் பியரிங் லிட், சென்னை | ...... | 50, 000 |
| அமால்கமேசன்சு பிரைவேட் லிட், சென்னை | ...... | 10, 000 |
| இந்தியா பிசுடன்சு இரெப்கோ லிட், சென்னை | ...... | 10, 000 |
| கையெழுத்திட்ட இயக்குநர்கட்கு | ...... | 35 |
| மொத்தம் | | 3, 75, 035 |
| பொதுவர்க்குத் தந்த பங்குகள் | ...... | 1, 24, 965 |

—Kothari's Economic & Industrial Guide of India, (1978-79)

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7518

பற்றென்ற பெருநெருப்பில் தமிழினத்தின் தனித்தன்மை - தமிழினப் பற்று - தமிழினத்தினுடைய தனியான தன்மை அழிந்து போய் விடக் கூடாதென்று, தந்தை பெரியார் இங்கு தமிழின மானத்தைத்-தன்மானத்தை ஊட்டித் தமிழினத்தை அந்தக் காலக் கட்டத்திலே காத்து நின்றார். அவர்களையும் பேரறிஞர் அண்ணா அவர்கள், ஓரணி-யையே உருவாக்கி, உலகெல்லாம் தந்தை பெரியாரின் அந்தக் கொள்கைகளைப் பரப்பிக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அந்தந்த கொள்கை (இலட்சியங்)களின் அடிப்படையிலே ஓர் இயக்கத்தையே தமிழ்நாட்டில் வெற்றி பெற செய்தார். அதேபோல, பல்வேறு துறைகளில் தமிழினத்திற்கு இன்னல் வந்த நேரங்களில் ஒவ்வொருவர் தோன்றி அந்த இனத்திற்கு வாழ்வளிக்க வழி வகுத்திருப்பதை நாம் காண்கிறோம். ஆரிய மொழியினுடைய ஆளுமை (ஆதிக்கம்) தமிழில் மேலோங்கித் தமிழின் தனித்தன்மை அழிந்துவிடுமென்ற கட்டத்திலே மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினார். அதே போலதான். இன்றைக்கு ஒரு வரலாற்றின் திருப்பு முனையிலே தமிழ் இனம் நிற்கிறது. நேற்றைய நாள் பேசிய பாவலரேறு அவர்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டார். யாரோ வெளிநாட்டவர் கூறியதாக 'இது அழியப் போகிற இனம்தானே! ஆகவே கேட்பதைக் கொடுத்து விடுங்கள்' என்று கூறியதாக அவர் கூறினார். அவர் அதைக் கூறிய போது 50-60 ஆண்டுகளுக்கு முன் பாரதி சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது.

தமிழைப் பற்றி யாரோ ஒரு பேதை சொன்னதாகச் சொன்னார். 'புத்தம் புதிய கலைகள் - பஞ்ச - பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்; மெத்த வளருது மேற்கே- அந்த- மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை' என்றுகூறி, 'மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த - மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்' என்று, யாரோ ஒருபேதை சொன்னான் என்று. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர் என்று, அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முன் அவன் சொன்னான். இன்னும் யாரோ கூறியிருக்கின்றார்கள். ஆனால் மெல்லத் தமிழினம் சாகும் என்று பாரதி கூறிய அச்சம், உறுதியாகத் தமிழினத்திலே, தமிழ் மொழியிலே ஒரு மறுமலர்ச்சியை ஒரு புதிய எழுச்சியைத்தான் ஏற்படுத்தும். யாரோ ஒரு பேதை மெல்லத் தமிழினம் இனி அழியும் என்று கூறினான். அது எமக்கு விடப்பட்ட ஒரு சூளா (சவாலா)கும். இந்தத் தலைமுறை தமிழனுக்கு விடப்பட்ட ஒரு சூளாகவே (சவாலாகவே) நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். (கைதட்டல்)

இந்தத் தமிழினத்தை அழிவிலிருந்து காப்பாற்ற வல்ல - ஆளும் இனமாக மாற்றி அமைக்க உறுதிபூண்டு உழைப்போம் என்றுதான் இந்த இடத்திலே நான் கூறி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்பர்களே! தமிழினக் காப்பு மாநாடு இந்த முற்பகல் வேளையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலகத் தமிழின முன்னேற்றக்

www.thamizham.net - Free E book No 7518

கழகத்தின் ஓர் உறுப்பாகத் தமிழினக் காப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பெரும் பேற்றை பாவலரேறு அவர்களும் அவர்களைச் சேர்ந்த இந்த அமைப்பை உருவாக்கி வருகின்ற அறிஞர்களும் எமக்களித்தார்கள். எந்தவகையில் நான் அதற்கு பொருத்தமானவனோ, நாம் அறியமாட்டோம்.

பேரறிஞர் தந்தை பெரியார் அவர்கள் கூறிய ஒரு சொல்தான் எனக்கு என்றும் நினைவிருக்கிறது. என்னுடைய வீட்டிலே தந்தை பெரியார் அவர்களின் படத்தோடு அவர் பொன்மொழிகளைத்தான் மாட்டி வைத்திருக்கிறேன். இங்கிருக்கின்ற 'துக்ளக்' இதழ் ஆசிரியர் சென்ற மாதம் என்வீட்டிற்கு வந்திருந்தார். நான் கூறினேன் அந்தப் படத்தின் கீழே இருக்கின்ற பொன் மொழிகள் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன. பெரியார் அவர்கள் கூறினர், 'இந்தப் பணியைச் செய்வதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று சிலர் கேட்கிறார்கள். எனக்குத் தகுதி உண்டோ இல்லையோ நான் அறியேன். ஆனால் இதைச் செய்வதற்கு வேறுயாரும் இல்லை என்ற நிலையிலே நான் இதைச் செய்கிறேன்' என்று பெரியார் அவர்கள் அதில் கூறி இருக்கிறார்கள். (கைதட்டல்) அதே போன்ற நிலையிலே தான் எனக்கும் தலைமைத் தாங்கத் தகுதியில்லா விட்டாலும், ஈழத்திலே துணிந்து எத்தனையோ துன்பங்களுக்கு நடுவிலே தமிழனுக்கு ஒரு தாயகம் உருவாக வேண்டுமென்று துணிந்து கூறுகின்ற ஒரு நிலையிலே, இதில் ஈடுபட எனக்குத் தகுதியையளித் திருக்கின்றார்கள் என நான் கருதுகிறேன்.

பெரியோர்களே! தமிழகத்தில் வந்து தமிழினக் காப்பைப் பற்றி ஈழத்திலிருந்து நான் இங்குக் கூற வேண்டிய தேவையாகத் தான் இருக்கிறது. (கைதட்டல்) இங்கே ஐந்து கோடி தமிழர்கள் வாழுகின்றார்கள். பாரதிதாசன் பாடினர். 'வாழுகின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால், சூழுகின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்' என்றார். இன்றைக்கு உலகிலே 6 கோடி தமிழர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்குள்ளே எத்தனை வேறுபாடுகள் எத்தனைப் பிரிவுகள்! எத்தனைப் பிளவுகள்! சாதியினால் வேறுபாடுகள்! சமயத்தினால் பிரிவுகள்! அரசியல் கட்சிகளினால் பிளவுகள்! நாட்டு ஆட்சிகளினால் பிரிக்கப்பட்டுத் தமிழினம் என்று சிந்திப்பதற்கே தகுதி அற்றவர்களாக, இன்றைக்கு உலகிலே 6 கோடி தமிழர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வரலாற்றில் வாழ்ந்த இனங்கள் சில உண்டு காலத்தின் கோலத்தினால் மாற்றார் வயப்பட்ட காரணத்தினால் தங்கள் நாட்டை இழந்து பல்வேறு நாடுகளிலே சிதறிஇப்படி நிலைக்கு தள்ளபட்ட இனங்கள் எத்தனையோ உலகிலே இருந்தன. இன்றைக்குக் கூட எனக்கு முன்பு பேசிய அறிஞர்கள் சிலர் குறிப்பிட்டது போல எத்தனையோ விடுதலை இயக்கங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. ஆறுகோடி அராபியர்கள் உலகிலே வாழுகிறார்கள். எத்தனையோ நாட்டின் எல்லைகள் அவர்களைப் பிரித்து வைக்கின்றன.

www.thamizham.net - Free E book No 7518

இன்னும் ஒரு சிலர் நாடற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பாலத்தீன விடுதலை இயக்கம் என்ற ஓர் இயக்கம் உலக ஏற்பிசைவைப் பெற்ற ஓர் இயக்கம். உலக ஒன்றிய நாடுகள் அவையிலே வீற்றிருக்கும் அதிகாரத்தைப் பெற்ற ஓர் இயக்கம். ஆனால் அவர்களுக்கு ஒரு நாடில்லை; அவர்கள் இலெபனானிலே, சிரியாவிலே முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் ஏதிலி (அகதி)களாகச் சென்று அமைத்த கூடாரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் சார்பிலே உலக அரங்கிலே இன்றைக்கு அவர்கள் உலவி வருகின்றார்கள். அவர்களுக்குள்ள வலிவென்ன? தங்களுக்கென்று ஒரு சொந்த மண்ணைமீட்டுக் கொள்ளமுடியாது போராடிக் கொண்டிருக்கின்ற பாலத்தீன விடுதலை இயக்கம், உலக அரங்கிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் இயக்கமாக இருக்கிற தென்றால், அதற்குரிய ஒரே ஒரு காரணம் அத்தனை அராபிய நாடுகள், எந்த அளவில் நின்றாலும், எங்குநின்றாலும் அத்தனைப் பேரும் பாலத்தீன விடுதலை இயக்கத்திற்குத் துணையாக அராபிய ஒற்றுமை என்ற அடிப்படையிலே, ஒன்றுபட்டு நிற்பதுதான் அதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும். அதே போன்ற ஒரு நிலையிலே தான் நாம் இருக்கிறோம். நேற்று பாவலரேறு கூறினார், 43 நாடுகளிலே நாம் பரவிச் சிதறி வாழ்கிறோம் என்று. நான் வெளிநாடுகள் பலவற்றிற்குச் சென்றிருக்கின்றேன். வெளிநாட்டில் அனைத்துலக மாநாடுகள் பலவற்றில் கலந்து கொள்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். பொதுநலநாடுகளின் பாராளுமன்றக் குழுக் கூட்டங்கள் பலவற்றிலே கலந்து கொண்டிருக்கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன் சமைக்கா நாட்டுக்குச் சென்றிருந்த பொழுது எத்தனையோ நாடுகளிலிருந்தும் பொதுவான அமைப்பு நாடுகளிலிருந்தும் நாடாளுமன்றங்களின உறுப்பினர்களாக இருப்பவர் வந்திருந்தாகள். பல நாடுகளிலிருந்தும் தமிழர்கள் வந்திருந்தார்கள். பிரிட்டிசு தாய்லாந்திலிருந்து ஒரு தமிழ்மகன் வந்திருந்தார். பிசித் தீவிலிருந்து ஒரு தமிழ்மகன வந்திருந்தார் மலேசியாவிலிருந்து வந்திருந்தார். சிங்கப்பூரிலிருந்து வந்திருந்தார். தமிழகத்திலிருந்து, இங்குத் துணை அவைத் தலைவராக இருந்திருந்த சுவாமிநாத் அவர்கள் வந்திருந்தார். ஈழத்திலேயிருந்து நான் சென்றிருந்தேன். ஆனால், இப்போது ஒன்றைக் கேளுங்கள்; தமிழகத்திலிருந்தும், ஈழத்திலிருந்தும் வந்திருந்த எங்கள் இருவரையும் தவிர, மற்றவர் யாரும் தமிழ் தெரியாத தமிழர்களாக இருந்ததை வருத்தத்தோடு நான் காண வேண்டியதிருந்தது. அங்கு வந்தார்கள் சில தமிழ்ப் பெண்கள். எனக்கு நல்ல நினைவு. ஒரு பெண்ணுக்குப் பெயர் சாவித்திரி. ஆனால் அதன் நடைஉடை அத்தனையும் அவர்கள் வாழும் ஆப்பிரிக்க மக்களுடன் சேர்ந்து இருந்ததாக! அங்கு பிரிட்டிசு கயானவிலிருந்து வந்திருந்த அந்த வடிவமாகவே அந்த அம்மையார் இருந்ததைப் பார்த்து, தமிழும் தெரியாத தமிழன் என்ற உணர்வும் இல்லாத நிலையில் வாழ்ந்து

www.thamizham.net - Free E book No 7518

கொண்டிருப்பதை நான் பார்த்தேன். இந்த வகையான நிலை ஏன் தமிழ் இனத்திற்கு ஏற்பட வேண்டும்? எந்த ஓர் இனமும் தன் தனித்தன்மையைப் பாதுகாத்து வாழ வேண்டுமானால், அந்த இனத்திற்கென்று ஒரு நாடு; அந்த இனத்திற்கென்று ஓர் ஆட்சி இல்லாவிட்டால், அந்தத் தனித்தன்மை பாதுகாக்கப்பட முடியாது என்பது நாம் காணக்கூடியதாகும். யூதர்கள் இதே நிலையில்தான் உலகெல்லாம் பரந்து வாழ்ந்தார்கள். சென்ற நாடுகளிலெல்லாம், வாழ்ந்த நாடுகளிலெல்லாம் காலத்திற்குக் காலம் அடிபட்டார்கள். இன்றைக்கு நாம் ஈழத்திலே அடிபடுவது போன்ற நிலையிலே காலத்துக்குக் காலம் அடிபட்டார்கள். அதற்கு விடிவாகத்தான் சென்ற நூற்றாண்டிலே அவர்கள் உலகம் தழுவிய ஓர் இயக்கத்தைத் தொடங்கினார்கள். தமது இனத்தைக் காப்பதற்குத் தமக்கென்று ஒரு நாடு வேண்டுமென்ற அந்த அடிப்படையோடு அவர்கள் ஓர் இயக்கத்தை தொடங்கினார்கள். இன்றைக்கு உலக அமைதிக்கே ஒரு சூனியமாக அமைந்து விட்ட இசரேல் நாட்டை ஆக்குவதற்கு அடிப்படை இடப்பட்டது, இசரேல் மண்ணிலே அன்று; பாலத்தீன மண்ணிலே அன்று. சேனிச்சு நாட்டிலே சென்ற நூற்றாண்டிலே கூட்டப்பட்ட ஒரு மாநாட்டிலேதான் என்பதை நாம் உணர்வோமாயிருந்தால், அழிவைத் தவிர்க்க வேண்டுமென்று உணர்கின்ற ஓர் இனம், உலகளாவிய ஓர் அமைப்பின் மூலம் தனக்கும் ஒரு நாட்டைப் பெற்றுத் தன் தனித்தன்மையைக் காத்துக் கொள்ள உழைக்க வேண்டுமென்ற தேவையை வரலாற்று அடிப்படையில் நாம் அதிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அன்பர்களே! உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் சாதியொழிந்த ஒரு தமிழினத்தை, ஒரு தமிழன், தமிழர்க்கே உயிர் வாழ்கின்றான், உயிர் விட்டாலும் தமிழர்க்கே உயிர் விடுகின்றான் என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறியது போல, தமிழினம் அந்த உயர்ந்த உணர்வு நோக்கினால், நெருக்கமாக, இறுக்கமான புதைக்கப்பட்ட ஓரினமாக அரசியல், பகைகள், வஞ்சகங்கள், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஓர் இனமாக, இயக்கமாக அமைந்து, பணிபுரிய வேண்டிய ஒரு காலக் கட்டத்திலேயே நாம் இங்கு இருக்கின்றோம். ஈழத்திலே நாங்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற போராட்டத்தைப் பற்றி, அதனால் நாம் அடைந்து கொண்டிருக்கின்ற துன்பங்களைப்பற்றி, தமிழ்நாட்டில் அண்மைக் காலத்திலே மிகத்தெளிந்த பல கருத்துகள் மக்களிடத்திலே பரப்பப்பட்டு வருகின்றன.

இந்தத் தமிழ்நாட்டு மக்கள் வேறு எந்த வகையில் வேற்றுமைப் பட்டிருந்தாலும், ஈழத் தமிழர்களுக்குச் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டு மென்பதில், சட்டமன்றத்திலே முதலமைச்சர் முன்மொழிய, எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் வழிமொழிய அந்தத் தீர்மானம் ஒரு மனதாகச் சட்டமன்றத்தில் நிறை வேற்றப் பட்டதை, இலங்கையில் வாழ்ந்து கண்ணீர் வடித்துக் கலங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்கள், அத்தனைத் துன்பங்களுக்கும் நடுவிலே கண்ணீரைத்

www.thamizham.net - Free E book No 7518

துடைத்துச் சிரித்த முகத்தோடு அந்த வானொலிச் செய்தியைக் கேட்டார்கள். (கைதட்டல்). இத்தனைத் துன்பங்களுக்கு நடுவிலே எமக்காகக் குரல் கொடுக்கத் தங்கள் வேற்றுமைகளை மறந்து தமிழக மக்கள் ஒன்றிப் போய் விட்டார்கள் என்பதைக் கண்டு நாம் மயிர்க்கூச் செறிந்தோம். உணர்ச்சி வயப்பட்டவர்களாக அதை வரவேற்று அந்தத் தன்மையை என்றும் பாதுகாக்க வேண்டியது தமிழகத் தமிழ் மக்களுடைய கடமை. அண்மையிலே செய்தித்தாள்களிலே வந்த செய்திகளைப் பார்த்து இங்குப் பேசிய எமது மதிப்பிற்குரிய வழக்கறிஞர் சோமனூர் பத்மநாபன் அவர்கள் கூறினார். செயவர்த்தன சென்ற கிழமை ஏதோ கூறியதாகச் செய்தித்தாளிலே வந்திருக்கின்றதே; எங்களுடைய விடுதலைப் போரின் போக்குத் தடைக்கப்படுமா? அது நின்று விடுமா? திசை திருப்பப்பட்டு விடுமா என்று சிலர் கொண்டிருக்கின்ற அச்சங்களைப்பற்றி அவர் கூறினார். ஒன்றை மாத்திரம் நான் உங்களுக்குத் தெளிவாக உறுதியாகக் கூறி விட்டு விடுகின்றேன். மறைந்த எமது இயக்கத் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை, இங்குக் கூறுகின்ற ஓர் எடுத்துக்காட்டைக் கூறுவதாக இருந்தால், விடுதலை என்ற தீவைச் சென்றடைவதற்கு அந்த ஒரு கப்பலைக் கட்டி எமது கையிலே ஒப்படைத்து, இந்தக் கப்பலைப் பக்குவமாகக் கொண்டு சென்று, தமிழ் ஈழத்தின் தமிழீழ விடுதலை என்ற துறையிலே கொண்டு சேர்த்து விடுங்கள் என்று ஒப்படைத்துச் சென்றிருக்கின்றார். கப்பலைச் செலுத்திக் கொண்டு செல்லும் போது சூறாவளி வீசுகின்றது. அஞ்சத்தக்க பாறைகள் குறுக்கிடுகின்றன. எத்தனையோ சுழற்காற்றுகள் இடையிலே நம்மைத் தாக்குகின்றது. வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு அதெல்லாம் தெரியாது. ஆனால் உள்ளேயிருந்து அதைச் செலுத்திக்கொண்டு போகின்ற எங்களுக்கு அதைத் தவிர்த்து, செலுத்த என்னசெய்ய வேண்டுமென்பதை நாம் தெரிந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து செலுத்திச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கடந்த நாலரை ஆண்டுகளில் எத்தனையோ இன்னல்களை நாங்கள் சமாளித்திருக்கிறோம். இலங்கையில் இன்றைய ஆட்சித் தலைவராக இருக்கின்ற குடியரசுத் தலைவர் செயவர்த்தன ஒரு சிறந்த பட்டறிவு மிகுந்த 'சாணக்கியம்' என்று கூறுவார்களே, அது நன்கு தெரிந்த ஓர் அரசியல் தலைவர். அவர்களுடன் அகவையில் எவ்வளவோ நான் குறைந்தவனாக இருந்தாலும் இன்றைக்கு அவருக்குக் கூடப்புரியாத ஒரு புதிராக நாங்கள் இயக்கத்தை நடத்தி வருகின்றோம் என்றால்(கைதட்டல்)உறுதியாக வள்ளுவர் வகுத்துக் கொடுத்த அந்த அரசியல் அறிவு நுட்ப வழியிலே, நாமும் இந்தக் கப்பலைக் கொண்டுபோய்ப் பாறையிலே மோதி விடாமல், எமது இனத்தைக் கொண்டுபோய் ஓர் அழிவிற்கு ஆளாக்கிவிடாமல், தன் வலியையும்,

www.thamizham.net - Free E book No 7518

மாற்ருன் வலியையும், துணை வலியையும் எல்லாவற்றையும் சீர் தூக்கிப் பார்த்து, எந்த அளவிற்கு எவ்வளவு வேகமாக நாம் செல்ல லாம்,எந்த அளவிற்கு நாம் சற்றுவேகத்தைக் குறைத்துச் செல்லலாம், என்றவற்றைக் காலத்திற்குக்காலம் கவனித்துச்,சரியான வகையிலே நாம் எமது விடுதலை இயக்கத்தை நடத்திக் கொண்டு வருகிரேம். எந்தக் கட்டத்திலும், என்ன நேர்ந்தாலும், நாம் அதில் அழியத் தான் வேண்டி வந்தாலும், திசை திருப்புவதோ குறிக்கோளை மறப் பதோ நடக்க மாட்டாது என்றளவிலே நான் உங்களுக்கு உறுதி யாகச் சொல்லிக் கொள்கிறேன். (கைதட்டல்).

வழக்கறிஞர் கூறினுர். குடியரசுத் தலைவர் (ஜனுதிபதி) கூறி விட்டாராம் தாங்கள் தமிழீழத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று. அவர் ஏற்றுக் கொண்டால் கதை முடிந்து விட்டது. (கை தட்டல்) ஆகையால் அவர் கூறி நாங்கள் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. ஆனுல் அதற்கு நான் என்ன சொன்னேன் என்று அவர் சொல்லவில்லை. ஏனென்ருல் அவருக்குத் தெரியும் என் கருத்து என்னவென்று. அவர்களும் அரசியலிலே சதுரங்கமாடப் பார்க்கிருர்கள். எங்களைப் பொறுத்தவரையிலே நாங்கள் ஆடுவது சதுரங்கம் அன்று. நான் அவருக்கும் சேர்த்துக் கூறுகிறேன். எம் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் எமக்குக் கூறித் தந்த அரசியல் தந்திரம் ஒன்று 'நம்ப நட. நம்பி நடவாதே'.நான் அவருக் கும் கூறினேன். எந்தச் செய்தியிலாவது நான் ஒரு சொல்லுறுதி கொடுத்தால், அதை நான் மீற மாட்டேன். ஆனுல் யாரையும் நம்பி நாங்கள் வீண் போக மாட்டோம். அந்த வழியிலே, இருக்கும் நிலைக்கு ஏற்ப,எமது இனத்தை வழிநடத்திச் செல்ல வேண்டியவர்க ளாக இருக்கிரேம். ஆனுல் **ஈழத்தமிழின விடுதலை வரலாற்றில், இன்றைய இந்த மாநாடு, இந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தொடக்கம் இன்றியமையாததாக**, ஓர் அளவுக் கல்லாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.

நான் கூறினேன், பாலத்தீன விடுதலை இயக்கம் உலக அரங் கிலே, தலைநிமிர்ந்து, நாட்டை மீறியும் வலுப்பெற்று நிற்கின்ற தென்ருல் அதற்குக் காரணம் உலகளாவிய அராபிய மக்கள், உலக ளாவிய இசுலாமிய மக்கள், அவர்கள் அத்தனைப் பேருடைய ஒன்று பட்ட ஆதரவு, அவர்கள் செல்வம், சாய்கால் அத்தனையும் அந்தப் பாலத்தீன விடுதலை இயக்கத்திற்குப் பின்னுல் நிற்கின்ற வலிவுதான். அந்த வலிவினுல் அணிசேரா நாடுகள் அத்தனையுமே பாலத்தீன விடுதலை இயக்கத்தை ஆதரிக்க வேண்டிய நிலை—அவர்களினுடைய எண்ணெய் வளத்திற்கு அஞ்சி, பெரிய வல்லரசுகள் கூட இந்த பாலத்தீன விடுதலையியக்கத்திற்குத் தலைசாய்க்க வேண்டிய நிலை,— அந்த நிலையிலேதான் அவர்கள் இன்றைக்கு உலக அரங்கிலே உலாவருகிருர்கள். அதைப் போலத்தான் அமெரிக்காவிலே வாழ்ந்த

www.thamizham.net - Free E book No 7518

யூதனென்றால் என்ன, அல்லது உருசியாவில் வாழ்ந்த யூதனென்றால் என்ன, எந்த நாட்டிலே வாழ்ந்தாலும் நமக்கொரு தாயகம் — வேண்டுமென்ற உணர்வை அந்த யூத மக்கள் பெற்று, அவர்கள் அத்தனைப் பேரும் திரண்டு அளித்த உதவியின் விளைவாகத்தான் இன்றைக்கு உலக அரங்கிலே அந்தச் சின்னஞ்சிறு நாடு தோன்றி யிருக்கின்றது.

நான்கு நாட்களுக்கு முன்பு இசுரேலிய நாட்டுப் பேராசிரியர் ஒருவர் என்னை வந்து பார்த்தார். அவருடைய பெயரே இசுரேல்; அவர் கூறினார், 'எங்கள் நாட்டிலே நாங்கள் நாற்பது இலக்கம்பேர் கள்தானே' நான் கூறினேன், 'நீங்கள் நாற்பதிலக்கமாக இருக்கலாம் ஆனால் உலகத்திலே உள்ள இந்த 1600 கோடி மக்களுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று. அந்த அளவிற்கு அவர்களு டைய வலிவு இருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் வாழுகின்ற அவர்களின் இனத்தவர்கள், அந்தந்த நாட்டு அரசியலில் அவர்களுக்குச் சார்பான நிலையிலே தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலே சவுதி அரேபியாவிற்கு வானூர்தி விற்க ரீகன் முற்பட்டால், அங்கேயுள்ள யூதன் அவருக்குத் தடை போட முற்படுகின்றான். தமிழனுக்காக உலக அரங்கிலே ஓர் ஒற்றுமை உருவாகித் தமிழினத் திற்காகக் குரல் கொடுக்க ஒவ்வொரு நாட்டிலும் தமிழர்கள் முன்வர வேண்டாமா ?

இங்கு என் அருமை நண்பர், மலேசியா நாட்டிலிருந்து வருகை தந்திருப்பதை நான் பார்க்கின்றேன். சிங்கப்பூர் நாட்டிலே தமிழ் மக்கள் நல்ல நிலையிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி யெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள், இந்த இன உணர்வைப் பெறவும், பெயரளவிலே தமிழனாய் இருந்து கொண்டு, இன உணர்வற்ற தமிழனாய் இருந்து கொண்டு, அங்கே தமிழன் துணைத் தலைவராய் இருக்கின்றான்; வெளிநாட்டமைச்சராய் இருக்கின்றான் என்று நாம் கனவு கண்டு பயனில்லை. அவர்கள் அத்தனைப் பேரும் இனவுணர்வைப் பெறுகின்ற ஒரு நிலையை, இந்த உ.த.மு.க. உருவாக்கும். என்னைப் பொறுத்த வரையில் இங்குள்ள கட்சி வேறுபாடுகள் இயக்க வேற்றுமைகள் அத்தனைக்கும் அப்பாற்பட்டு, தமிழகத்தில் வாழுகின்ற அத்தனைத் தமிழ்மக்களையும் ஒருங்கு நோக்கி, ஈழத் தமிழினத்தினுடைய இன்னல் தீர்க்க, அவர்கள் துயர் துடைக்க அவர்கள் துன்பத்தைப் போக்க, நீங்கள் மாத்திரமன்று. உங்கள் மூலம் இன்று ஏற்படுத்தப் பெற்றிருக்கின்ற இந்த அமைப்பின் வழி, உலகளாவிய தமிழினத்தைத் திரட்டி எமக்குப் பக்கத் துணையாக நிற்க வழி வகுக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். (கைதட்டல்).

தமிழினக் காப்பு மாநாடு என்று கூறும் போது தமிழினத்திலே ஒரு தெளிந்த உணர்வு ஏற்பட்டுவிட்டது என்பதுதான், அதன்

www.thamizham.net - Free E book No 7518

கருத்து. இனத்திற்கு ஒரு துன்பம் வந்திருக்கிறது என்பதால் அந்த உணர்வு ஏற்பட்டு விட்டதாக அந்தத் துன்பத்தை தமிழன் என்று உணர்கின்ருனே, என்று தெளிகின்ருனே அன்றே அந்த எச்சரிக்கையினின்று தன்னை மீட்டுக் கொள்ள, காத்துக் கொள்ள வழிவகைகளைத் தேட அவன் அணியமாகி விட்டான் என்பதுதான் அதனுடைய கருத்து. பாவலரேறு அவர்கள் இங்கு காலை நிகழ்ச்சியைத் தமிழினக் காப்பு மாநாடாக நடத்தியதன் மூலம் இனத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த அழிவென்ற கேட்டை அழிவை எதிர் நோக்கி நிற்கின்ருேம் என்ற ஒரு எச்சரிக்கையை எமக்கு விடுத்திருக்கின்ருர். அதைக் கண்டு நாங்கள் துவண்டு விடக் கூடாது. யாரோ சொல்லி விட்டான் தமிழினம் அழியப் போகிறது என்று — யாரோ சொல்லி விட்டான் என்று யாரும் துவண்டு விடக் கூடாது. வரலாற்றில் எப்பொழுதும் இல்லாத எழுச்சியை நாம் இன்றுதான் பெற்றிருக்கின்ருேம். இனிதான் பெறப்போகின்ருேம். (கைதட்டல்). ஆனபடியால் உறுதியாக நாம் அழிய மாட்டோம். நாம் வாழ்வோம். நாம் வாழ்வோம். நாம் விடுதலை பெற்ற இனமாக உலக ஒன்றிய அவையிலே தமிழன் சார் பிலே அவர் கொடி பறக்க (கைதட்டல்) நாம் உறுதியாக வாழ்வோம் என்று சொல்லி,தமிழனுக்கென்று ஒரு நாட்டை அமைக்க உழைத்து வருகின்ற ஓர் இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவன் என்ற வகையிலே நான் உங்களுக்குக் கூறிக் கொள்கிறேன். உங்களது உணர்ச்சியைத் தூண்டிவிட, உங்களுடைய உணர்ச்சியான கைதட்டலைப் பெற்றுக் கொள்வதற் காக இங்கு வரவில்லை. என்னுடைய உள்ளத்தில் ஆழமாக இருக் கின்ற ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை. நேர்மையான நெறியிலே நின்று. உண்மையான வழியிலே நின்று,ஆண்ட ஓர் இனம் மீண்டும் ஆள வேண்டும். அந்த இனம் வாழ்வதற்காகத் தன்னை ஆள வேண்டும் என்று நான் செல்கின்ற இந்த வழியில், உறுதியாக தோல்வி காண முடியாது. எத்தனையோ வெளிநாட்டுச் செய்தி யாளரோ, வெளிநாட்டு அரசியல் தலைவரோ, வெளிநாட்டுத் தூது வரோ என்னை வந்து பார்க்காத நாட்களில்லை. அவர்கள் எல்லோரும் கேட்பார்கள் — நீங்கள் இலங்கையிலே இவ்வளவு சிறுபான்மையாக இருக்கின்றீர்களே, நீங்கள் எப்படி உங்கள் விடுதலையைப் பெறுவீர் கள்? நான் அவர்களுக்குக் கூறுகின்ற ஒரே விடை 'உண்மை வெல் லும், நேர்மை வெல்லும் என்பது எங்கள் நம்பிக்கை!' என்பதே.

ஓர் இனம் தங்கள் விடுதலைக்காக உறுதியாக நேர்மையான முறையிலே வழி நடத்தப் பட்டுச் செல்லுமானுல், அந்த இனம் விடுதலை பெறத் தவறுவது வரலாற்றிலே கிடையாது என்பதை நான் அவர்களுக்குக் கூறுவேன். 'எப்போது பெறுவீர்கள ? என்று கேட்டார்கள். நான் கணியம் படிக்கவில்லை என்று நான் அவர் களுக்கு கூறினேன். ஓர் இனத்தின் வரலாற்றிலே விடுதலை பெறு

www.thamizham.net - Free E book No 7518

வது அந்த இனத்தின் போராட்டத்தினுல், முயற்சியினுல், மட்டு மன்று பல்வேறு உலக நிலைகளை—பல்வேறு சூழ்நிலைகளைச் சார்ந்து — அந்த இனத்தை அடக்கி ஆளுகின்ற ஆட்சியின் முயற்சியில் ஏற் படக் கூடிய வீழ்ச்சி,எழுச்சி எல்லாவற்றையும் சரியான முறையிலே பயன்படுத்தக் கூடிய ஒரு தலைமை இயக்கத்தினுல்தான் ஓர் இனம் விடுதலைப் பாதையிலே செல்ல முடியும். அதை ஈழத்தமிழினத்திற்கு ஓரளவு—நாங்கள் தனிப்பட்ட ஒருவர் இருவரல்லர் ஒரு புதிய வழித் தோன்றலை, ஒரு புதிய தலைமுறையையே தந்தை செல்வா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்ருர்கள். அவர்கள் காட்டிய வழியிலே நாம் நடத்திச் செல்கின்ரேம்.

இன்று இந்த மாநாட்டைப் பார்க்கின்றேன்;உங்கள் உணர்ச்சிக ளையும் காண்கின்றேன். இங்கு உரையாற்றிய அறிஞர் பெரு மக்கள், பேரா. சுந்தரனுர் போன்ருேர்கள், இங்கு தந்தை பெரி யாருடைய ஒரே பிறங்கடையாக, வழித் தோன்றலாக அவர் பாதை யிலேயே திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டிருக்கின்ற அன்பர் வீரமணி போன்றவர்கள் ஆற்றிய உரைகள்(கைதட்டல்)எங்களுக்கு ஒரு புதிய ஊக்கத்தைக் கொடுக்கின்றன ; ஒரு புதிய உள உறுதி யைக் கொடுக்கின்றன. இதற்கு மேல் என்னுடைய தலைமை உரை யை நான் நீட்டிக் கொண்டு செல்ல விரும்பவில்லை. பல்வேறு அறிஞர் பெருமக்கள் தமிழினத்தை ஒவ்வொரு துறையிலும், மொழி இன்னும் பல துறைகளிலும் எப்படிக் காக்க வேண்டுமென்பது பற்றிச், சிறந்த உரைகள் ஆற்ற விருக்கின்ற கரணியத்தால், மீண்டும் ஒரு முறை பாவலரேறு அவர்களுக்கும், இத்தொடக்க விழாக் குழுவினாக்கும் இங்கு வருகை தந்த உங்களத்தனைப் பேர்க் கும், இந்தத் தமிழினக் காப்பு மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் இந்தப் பெரும் பேற்றை எமக்களித்து,ஈழத்தமிழினத்தைப் பெருமைப் படுத்திய,ஈழத் தமிழினத்தின் கண்ணீரை, இங்கு வீரமணி கூறியது போல,அந்தக் கண்ணீரைத்துடைக்க உங்கள் கைகள் காத்திருக்கின் றன என்பதை உறுதிப்படுத்திய உங்கள் அத்தனைப்பேருக்கும் நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.(கைதட்டல்)

---

(40-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைதாங்கி நடத்த இயலாதா? எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முழக்கம் ஒரு பக்கம் முழக்கப்படுகின்றது. 5 உலகத்தமிழ் மாநாடுகள் நடத்தப் பெற்றன. 20, 000 தமிழாசிரியர்களின் மானம் காக்கப்படவில்லை. தமிழாசிரியர்கள் தலைநிமிர்ந்து நடக்க வழி காணவில்லை. தமிழாசிரியர்களின் இவ்வுரிமையைக் காத்திட, அவர்க ளும், தலைமையாசிரியராகலாம் என்ற ஆணை பிறப்பிக்க அரசுக்குப் பணச்செலவு ஏற்படுமா என்ருல், அதுவும் இல்லை.தமிழாசிரியர்களைத் தலைமையாசிரியர் ஆக்குவதில் உள்ள சிக்கல்தான் என்ன?

தமிழக அரசும், தமிழகக் கல்வித்துறையும் இதைப்பற்றி சிந்தித்து ஆவன செய்யுமா? o

www.thamizham.net - Free E book No 7518

# தமிழாசிரியர்களின் அவல நிலை!

—புலவர் கொ. ப. இராமசாமி ,க. மு.
செயலர், மேனிலைத்தமிழாசிரியர் கழகம், சேலம் (மா. வ.)

தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஆட்சி மொழி என்று சட்டம் நிறைவேறி 25 ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன. தமிழ் நாட்டுப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ்தான் முதல்மொழி; பள்ளி கல்லூரிகளில் பயிற்று மொழியாகக்கூட தமிழ் மொழி உள்ளது.

தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் கணிதம் அறிவியல் வரலாறு,போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் க.இ (பி.ஏ) அல்லது அறி. இ. (பி. எஸ். சி.) இளங்கலைப் பட்டத்தோடு கல். இ. (பி. எட்) பட்டம் பெற்றிருந்தால் போதும். அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமையாசிரியராகப் பதவிஉயர்வு பெறத் தகுதியுள்ளவர் ஆவர். அதோடு அவர்கள் மாவட்டக் கல்வி அலுவலராகவும், முதன்மைக் கல்வி அலுவலராகவும் உயர்வு பெற்றுச் செல்ல வாய்ப்புகள் உள்ளன. எந்தத் தடையும் இல்லை.

ஆனால், தமிழ்நாட்டில் நம் தாய்மொழியான தமிழ்மொழியைக் கற்பிக்கும் தமிழாசிரியர்கள் க. மு; கல். மு.(எம். ஏ.; எம். எட்)போன்ற முதுகலைப் பட்டங்களைப் பெற்றிருந்தாலும், தமிழ்நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற இயலாது. தமிழாசிரியர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு தீங்கு இழைக்கப்பட்டுள்ளது. தமிழாசிரியராகப் பணியில் அமர்த்தப்பட்ட ஒருவர், தலைமையாசிரியராக உயர்வு பெறத் தகுதியற்றவர் என்று, கல்வித் துறையின் நெறிமுறைகள் கூறுகின்றன. நம்நாடு விடுதலை பெற்று 34 ஆண்டுகளாகியும் தமிழ்மொழிக்கு விடுதலை கிட்டவில்லை இதுதான் இன்றைய நடைமுறை. இந்த நெறிமுறைகளை மாற்றச் சொல்லித் தமிழாசிரியர் கழகம் 25 ஆண்டுக்காலமாக வற்புறுத்தி வருகிறது.பல மாநாடுகளில் வற்புறுத்தப்பட்டன இன்றுவரை தமிழாசிரியர்களுக்குப் புறம்பான அரசு ஆணைகள் மாற்றப்படவில்லை. இஃது என்ன கொடுமை! இது எந்த நாடு? நாம் எந்தநாட்டிலே வாழ்கிறோம்? தமிழாசிரியர்களை மேலே விடாமல் தடுப்பது யார்? தடைக்கல்லாக இருக்கும் மிகப் பெரியஆற்றல் எது?

மேல்நிலையில் பணியாற்றும் தமிழாசிரியர்கள், மேல்நிலைப் பள்ளிக்குத் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெறலாம் என்று மேல்நிலைப் பணிநெறிகளில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பணிநெறிகளும் தமிழாசிரியர்களிடத்தில் ஐயத்தையும், குழப்பத்தையுமே உண்டாக்கியுள்ளது. அந்த நெறிகளில் உடனடியாகத் தமிழாசிரியர்கள் உயர்வு பெற வழியின்றி மறைமுகமாகத் தடங்கல்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. ஏன் இந்தக் குழப்பம்? தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்குச் சட்டம் இடம்தரவில்லை. வேற்றுமொழியான ஆங்கிலத்திற்குச் சட்டம் இடம் தருகிறது. தமிழாசிரியர்களை மேலே விடாமல் தடுப்பதன் நோக்கம் என்ன? தமிழாசிரியர்கள் பள்ளிகளைத்

(தொடர்ச்சி 39-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7518

செயலைத்தான் செய்து வருகிறார். தி. மு. கழகம் பொதுமக்களைக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றிருந்தது. ஆட்சிக்கு வந்தபின் பதவிகள் அனைத்தும் பணம் படைத்தவருக்கும் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குந்தாம் என்ற பேராயக்கட்சியின் கொள்கையையே செயல்படுத்தியது. இன்று வலுவிழந்துள்ளது.

தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனக்காப்பு உணர்வினைப் பொது மக்களிடம் கூறி, விழிப்பும் பற்றும் ஏற்படச் செய்து, அவர்களைக் கொண்டே கீழே இருந்து அதாவது சிற்றூரிலிருந்து அமைப்பு உருவாகி மேலே வரவேண்டும். அதுதான் ஒரு விடுதலை இயக்கத்திற்கு அரணாகவும், ஊற்றாகவும் அமையும். அதுவே விடுதலையைப் பெற்றுத்தரும். அப்படிப் பெற்றுத்தரும் காலத்து விடுதலை அமைப்பின் மேல்மட்டத்தில் இருக்கும் படித்தவர்கள் அதிகார மாற்றத்தைத் தங்கள் கையிலே சிக்க வைத்துக் கொண்டு பொதுமக்களைப் படுகுழியில் தள்ளி வதைப்பதுதான் ஒவ்வொரு நாட்டின் விடுதலை இயக்கமும் கைக்கொண்டுவரும் வரலாறாகும்.

ஒரு விடுதலை இயக்கத்தில் மிகுதியான குடியரசமைப்பும் வழக்காடுபவர்களும் புகுந்து விட்டால், அஃது அமைக்கும் அரசு முதலாளிகளின் அரசாகத்தான் அமையும். சமநிலைக் கட்டுப்பாட்டு உணர்வும் அழிந்துபடும்.

தமிழ் இனப் பாதுகாப்பென்பது விடுதலை பெற்ற தனித்தமிழ் நாடு ஒன்றால்தான் முடியுமே தவிர, வெறும் அமைப்புகளால் அதனைச் செய்ய முடியாது. அல்லாமல் தமிழினப் பாதுகாப்பென்பது இயக்கத்திலிருப்பவர்களைப் பாதுகாக்க உதவுமே தவிர எந்த வகையிலும் இனத்தைப் பாதுகாக்க உதவாது.

பெரியவர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 'தமிழர் கழகம்' என இயக்கமும் 'தமிழர் நாடு' என்ற இதழும் நடத்தி, கடை விரித்தேன் கொள்வாரும் மில்லை கொடுப்பாருமில்லை என்று எழுதி முடித்தார்கள். 1947-இல் தில்லியில் ஆசியா உறவு மாநாடு ஒன்று நடந்தது. திரு. ம. பொ. சி. அவர்கள் அதுபற்றி தமது தமிழரசு இதழில் இந்த மாநாடு நடைபெற வேண்டிய இடம் காவிரிக்கரையில், கங்கைக் கரையில் அன்று என எழுதிவிட்டு ஓய்ந்து விட்டார்கள்.

இறுதியாக ஒன்று உறுதியாகிறது. தாங்கள் எங்களையெல்லாம் உண்மையான தமிழினத் தலைவன் இவனே எனக் கூறி மீண்டும் ...த்தலைவரான அருட்செல்வரிடமே ஒப்புக் கொடுத்து விடுவீர்கள் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

—**வெ. திருப்பாற்கடல்,** கிளை நூலகம், வள்ளியூர்-627117.

0 : 894 : பேரன்புள்ள ஐயா அவர்களுக்கு, மலர்ப் பணி முடிந்து அமைப்புப் பணி தொடங்கி இருக்கும் என நம்புகிறேன். இந்த நாட்டு மக்களுக்கு நாம் எவ்வளவோ செய்தாக வேண்டும். ஓராண்டு ஈராண்டுப் பணிகள் அல்ல. பல ஆண்டுப் பணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அறியாமையும் வறுமையும் நம் மக்களை வாட்டி வருகின்றன. இம் மக்களை அரவணைத்துக் கைதூக்கி வி_ விரும்பும் உள்ளங்கள் இல்லை என்றே அஞ்சுகிறேன். தொலைநோக்குள்ள அரசியல் கட்சியோ திட்டமிட்டுச் செயல்படும் தொண்டர் குழுவோ இல்லை. தொண்டுள்ளம் படைந்தவர்கள் இங்குமங்குமாகச் சிலர் சிதறுண்டு கிடந்து முடிந்த தொண்டினை ஆற்றி வருகின்றனர். நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உள்ள தன்னலம் அற்ற மக்கள் இயக்கமாக உ.த மு.க.உருவாகுமா? உருவாக வேண்டும் என விரும்பு

www.thamizham.net - Free E book No 7518

கிறேன். கொள்கை அறிந்து கொள்கைவழி நடக்கும் தொண்டர்கள் உருவாக உழைப்போம். — **சிவ. ஆதிநாதன்.** குந்தகுந்தர் நகர்.வ.ஆ.

0: 895 : வணக்கத்திற்குரிய ஐயா, நீண்டகாலத் 'தென்மொழி' அன்பனுகிய நான் இடையில் அண்மைக்காலமாகத் தொழில், குடும்பப் பொறுப்பின் காரணத்தால் 'தென்மொழி'யுடன் தொடர்பு வைத்துக் கொள்ள இயலாமல் போய் விட்டது. அந்தக் காலம் என் வாழ்வில் ஈடு செய்ய முடியாத இழப்பாகவே கருகிறேன். இனியும் அது தொடர வேண்டாம். மேலும் தங்கள் அயராத முயற்சியின் விளைவாக இத் தமிழகத்திற்கும் உலகத் தமிழ் மக்களுக்கும் பணி செய்யும் பொருட்டு உ. த. மு. க எனும் செயல்பாடுடைய இயக்கம் தோற்றுவித்திருப்பதை அறிந்து அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். தங்கள் தலைமையில் உலகத் தமிழ் மக்களும், தமிழ் மண்ணும் சிறப்பெய்த வேண்டுமாய் அவாவுடையோனுய் இருக்கிறேன். - **வீரச்செல்லக்கண்ணு**, கோவை-2

0: 896: பேரன்புடையீர் வணக்கம்! 17.1.82 ஆம்நாள், வேலூர் வணிகவைசிய திருமணக்கூடத்தில் தங்கள் பேச்சைக்கேட்டு மகிழ் வுற்றேன். தமிழரை வீறு கொண்டு எழச் செய்து தமிழ் வளர்க்கச் சொல்லும் பேச்சு! தங்கள் பேச்சை எங்கள் பள்ளியில் சொல்லி மகிழ் வுற்றேன். பெரும்பான்மை ஆசிரியர்கள், "நாங்களும் அவர்பேச்சைக் கேட்க வராமல் போனேமே" யென வருந்தினர். அடுத்த முறை வேலூர் பக்கம் வந்தால் கடிதம் எழுதுங்கள். வாழியூருக்கு அழைத்து வருகிறோம். தங்கள் தமிழ்த்தொண்டு மேலும் மேலும் வளர வேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன். — **வே. இராசவேலன்**, க.மு.இலக்.இ. தலைவர். திருக்குறள் பேரவை. வாழியூர். (வ. ஆ-)

0: 897 பாவலரேறு அவர்களுக்கு: நெடுந்தகையீர், வணக்கம். உ. த. மு. க. மாநாடு முடிந்த புலனங்களை விரிவாக உள்ளடக்கிய தென்மொழி இதழ் வந்துவிட்டது. மாநாட்டுத் தீர்மானங்களும், முடிவு களும் சிறப்புடன் இருப்பதுடன் உங்கள் பேராற்றல் அவற்றில் தெளி வுறுகின்றன. சில முடிவுகள் உலகத் தமிழினத்தின் நலன் களுக் காகவும் சிறப்புறுகின்றன. தமிழகம் தமிழரகமாக ஆக்கப்படவேண் டும் என்ற குறிக்கோள் சிலவற்றில் வலியுறுத்துகின்றன. கொடிப் பாடலும், விடுதலைப்பாவும் மிகமிகச் சிறப்பு. ஓய்வும் ஒழிச்சலுமின்றி மிகக் கடுமையாக உழைத்துச் சிறப்புடன் உ. த. மு. க. மாநாட்டை வெற்றிமாநாடாக்கிய தங்களுக்குப் பணிவுடன் நன்றியும்வணக்கமும் புலப்படுத்துகிறேன். — **இரா. ந. வீரப்பன் — கிள்ளான்**, மலேசியா

0: 898: பெருமதிப்பிற்குரிய புலவர் அவர்கட்கு நீங்கள் அனுப்பி வைத்த 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டு' மலர் கிடைக்கப்பெற்றோம். தமிழின முன்னேற்றத்திற்கான உங்களின் இடைவிடாத தொண்டினை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம். அதற்கு என்னுடைய சார்பிலும் தோழர்கள் சார்பிலும் எங்களின் மகிழ்வினையும் பாராட்டுதலையும் புரட்சி வணக்கத்தையும் வாழ்த்து தலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— **கு. கலியபெருமாள்**, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, நடுவண் சிறை சென்னை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).

www.thamizham.net - Free E book No 7518